இ னி து ரகசியம் அல்ல!

‘சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அரசியல்வாதியும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா நேற்று

பக்கம் 03

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 29 செவ்வாய்க்கிழமை 12.06.2018 | கதிர் 218

## தயாசிறியிடம் 5 மணி நேரம் விசாரணை



கொழும்பு, ஜுன் 12

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவிடம் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் சுமார் 5 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

பேர்பேச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த விசாரணை நேற்று இடம்பெற்றது.

பக்கம் 14

பிரத்தியேகச் செய்தி

# கோட்டா வேண்டாம்! மேற்குலகம் எதிர்ப்பு

## அமெ.தூதுவர் மஹிந்தவிடம் தெரிவிப்பு

## அதிர்ச்சியில் ராஜபக்ஷ குடும்பத்தவர்கள்

- விசேட அரசியல் செய்தியாளர் -


கொழும்பு, ஜுன் 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவைக் களமிறக்க வேண்டாம். அவரின் தேர்வை மேற்குலகம் அடியோடு விரும்பவில்லை; வரவேற்காது.


- இப்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் நேற்று முன்தினம் இரவு நேரடியாக - பட்டவர்த்தனமாக - தெரிவித்துவிட்டார் என்று மிகமிக நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

மேற்குலகின் கருத்தாக அமெரிக்கத் தரப்பால் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இந்த விடயம் நேரடியாகக் கூறப்பட்டமை ராஜபக்ஷக்கள் குடும்பத்துக்குள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறியவந்தது.

பக்கம் 03



## 1/2நாள் கடையடைப்பு வடக்கில் பிசுபிசுப்பு



யாழ்ப்பாணம், ஜுன் 12

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணம் முழுவதும் நேற்று அரைநாள் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும், வழமையான

பக்கம் 14

## கடலட்டைத் தொழிலைத் தடுக்க வலியுறுத்தி யாழ்.நகரில் பேரணி

### வடமராட்சி கிழக்கு மீனவர்கள் திரண்டனர்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுன் 12

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறிய கடலட்டைத் தொழிலை நிறுத்த வலியுறுத்தியும், தென்னிலங்கை மீனவர்களை அங்கிருந்து வெளியேறக் கோரியும் வடமராட்சி

பக்கம் 14

## ஆளுநருடன் மீனவர்கள் நாளை பேச்சு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுன் 12

வடமராட்சி கிழக்கில் அத்துமீறிச் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் தொடர்பில் வடக்கு ஆளுநருக்கும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நாளை புதன்

பக்கம் 14

## பேரணிக்கு சென்ற மாவை திருப்பி அனுப்பப்பட்டார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுன் 12

வடமராட்சி கிழக்கில் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டு வரும் தென்

பக்கம் 14

## பகிடிவதைகளுக்கு பின்னால் அரசியல்வாதிகளே உள்ளனர்



### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 12

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மாணவர் பகிடிவதைகளுக்குப் பின்னால் இருப்பது அரசியல்வாதிகளே. மாணவர் சங்கங்களைத்

பக்கம் 14

## காணாமற்போனோர் செயலக அமர்வுக்கு எதிராக போராட்டம்

திருமலை, ஜுன் 12

திருகோணமலையில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள காணாமற் போனோருக்கான அலுவலகப் பிரதிநிதிகள் நடத்தும் அமர்வை தாங்கள் கடுமையாக எதிர்ப்

பக்கம் 14

## வருத்தம் தெரிவித்த மீனவர் சம்மேளனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரில் நேற்று நடத்தப்பட்ட மீனவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்வதற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 03

## இராணுவத்தைப் பிரிக்க வடக்கு முதல்வர் முயற்சி

### கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 12

இராணுவத்தைப் பிரிக்க நினைக்கும் வடக்கு முதல்வருக்கு எதிராக, இலங்கை அரசு நடவடிக்கை எடுக்குமா எனக் கூட்டு எதிரணி கேள்வி எழுப்பியுள்ளது.

பக்கம் 03

## பிணைமுறி மோசடி தொடர்பில் விரிவான விசாரணை வேண்டும்

### வடக்கு முதல்வர் கோரிக்கை

கொழும்பு, ஜுன் 12

பிணைமுறி மோசடி தொடர்பில் விரிவான மற்றும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர்

பக்கம் 14

### ஜனநாயகம், வாக்குரிமை, மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்கு

# தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த வேண்டியது முக்கியம்

## ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 12

ஜனநாயகம், வாக்குரிமை, மற்றும் ஒரு நாட்டின் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்கு தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த வேண்டியது முக்கியமானது என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்காளர் நாளை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை அனுராதபுர மாவட்டச் செயலகத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் வரலாற்றில் மோசடிகள் நிறைந்த மூன்று தேர்தல்கள் நடந்தன. 1999 ஆம் ஆண்டு நடந்த வடமேல் மாகாணசபைத் தேர்தல். 1982இல் நடந்த மக்கள் கருத்து வாக்கெடுப்பு. 1981 இல் நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் ஆகியனவே அவை.



யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது, வாக்களிப்பு நிலையங்களில் கொழும்பு, குருநாகல் பகுதிகளில் இருந்து, கொண்டு வரப்பட்ட வெளியாட்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இது, வாக்குப்பெட்டிகள் காணாமற்போக காரணமாயிற்று. பின்னர் சில வாக்குப் பெட்டிகள் மீட்கப்பட்டன. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட அன்றே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம், மிதவாத தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் தேர்தல் மீதான நம்பிக்கையைச் சிதறடித்தது. வாக்குகளுக்குப் பதில் ரவைகள் என்ற நிலைக்கு அவர்கள் செல்ல வழியமைந்தது.

வடக்கில் ஆயுதக் குழுக்கள் பலமடைய, 1983 கலவரம் தான், காரணமானது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், இந்தக் குழுக்களின் தோற்றுவாய் என்று, 1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைத்தான் நான் நினைக்கிறேன்.

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், இளைஞர்களைப் பிரதிநிதித் துவம் செய்த அரசியல் கட்சி ஒன்று பெற்றுக் கொண்ட வாக்குகளை வைத்துப் பார்த்தால், 1983இல் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் அந்தக் கட்சிக்கு 5 தொடக்கம் 10 ஆசனங்கள் கிடைத்திருக்கும்.

ஆனால், இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படாதமையால் அவர்கள் தேர்தலின்மீதுநம்பிக்கையிழந்தனர். இது அவர்களில் சிலர் ஆயுதம் ஏந்த வழியமைத்தது. இதன் தொடர்ச்சியாக 60 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

பொருத்தமற்ற தேர்தல்கள் மற்றும் தேர்தல்களைப் பிற்போடுவது, மரணங்களையும், அழிவுகளையும்தான்கொண்டு வரும்.

1972 ஆம் ஆண்டு அரசமைப்பின் மூலம், அப்போதைய அரசு தனது பதவிக் காலத்தை ஐந்தில் இருந்து ஆறு ஆண்டுகளாக நீடித்தது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகி, புதிய தேர்தலை எதிர்கொண்டார். அது அரசியல் வாதிகளுக்கு முன்னுதாரணம்.

வடமத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தி, அங்குள்ள வாக்காளர்கள் தமது விருப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டியது, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கடப்பாடு ஆகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைத்தேர்தலை உடனடியாக நடத்தவும்

### சபாநாயகருக்கு பவ்ரல் அவசர கடிதம்

கொழும்பு, ஜூன் 12

நிறைவடைந்துள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி பவ்ரல் அமைப்பு சபாநாயகருக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளது.

பதவிக்காலம் முடிவடைந்து 8 மாதம் நிறைவடைந்துள்ள மூன்று மாகாணசபைகள் உட்பட எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன்நிறைவடையவுள்ள மாகாண சபைகள் மூன்றுக்குமான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கோரி பவ்ரல் அமைப்பு சபாநாயகருக்கு அவசர கடிதம் ஒன்றினை நேற்று வழங்கியுள்ளது.

மாகாணசபைகளின் கால எல்லை நிறைவடைந்தவுடன் சபைகளுக்குரிய எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பித்தவுடன் அது குறித்த விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களின் கால எல்லை நிறைவடைந்து 8 மாதங்கள் முடிவடைந்துள்ளதுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் மேலும் மூன்று மாவட்டங்களுக்கான கால எல்லைநிறைவடையவுள்ளது.

8 மாத காலம் முடிவடைந்ததும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது உள்ளமையானது ஜனநாயகத்துக்கு முரணானதும் மக்களது உரிமைக்கு எதிரானதும் எனச் சுட்டிக்காட்டியே இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தபால் ஊழியர்களின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகள்!

கொழும்பு, ஜூன் 12

தபால் சேவை ஊழியர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை என்று தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

தபால் சேவை சங்கத்தினரின் பிரதிநிதிகளோடு கடந்த முதலாம் திகதி பேச்சு நடத்தப்பட்டுள்ளது. எனினும், தபால் அமைச்சோ, தபால் திணைக்களமோ தனித்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அதன் போது, அமைச்சரவை ஆவணம் ஒன்றை சமர்ப்பித்து இதற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாக தெரிவித்த அமைச்சர், இவ்வாறான சூழ்நிலையில் தொழிற்சங்க போராட்டம் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.- என்றார்.

# களுத்துறை ஆடை தொழிற்சாலையில் தீ விபத்து!

கொழும்பு, ஜூன் 12

களுத்துறை, தொடங்கொட சந்தியில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டடத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மேல் மாகாண சபை உறுப்பினர் ஜகத் விதானாவுக்குச் சொந்தமான ஓர் ஆடைத் தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடங்கொட பொலிஸார் மற்றும் களுத்துறை தீயணைப்பு படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் சேத விவரங்கள் மதிப்பிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தவறான பாதையில் செல்கிறார் கோட்டா

### கூறுகிறார் தயான் ஜயதிலக்க

கொழும்பு, ஜூன் 12

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார் என்று, முன்னாள் இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாரஇதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார். அவரைச் சுற்றி பண முதலைகளும், கடும்போக்கு இராணுவத்தினரும்தான் இருக்கிறார்கள் என்றும் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பாதையை உருவாக்குவதற்காக, ‘எலிய’ அமைப்பை ஆரம்பிப் பதில் முக்கிய பங்காற்றியவர் தயான் ஜயதிலக்க என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வாள்வெட்டு நபர்கள் மடக்கிப் பிடிப்பு: சுமந்திரன் எம்.பி. நேற்று பாராட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 12

கொக்குவில் மேற்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாள்வெட்டில் ஈடுபட்ட இளைஞர்கள் மூவர் மடக்கிப் பிடிக்கப்பட்டமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் பாராட்டியுள்ளார்.

கொக்குவில் மேற்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்கள் மூவரை அப்பகுதி மக்கள் சேர்ந்து கலைத்துப் பிடித்து நன்கு கவனித்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மக்களின் இந்த நடவடிக்கையையே சுமந்திரன் பாராட்டியுள்ளார்.

மக்கள் கிளர்ந்தெழுந்து வன்முறைகளை மேற்கோள்வோரை அடையாளம் காண முற்பட்டுள்ளமை யாழ். குடாநாட்டில் அராஜகங்களை ஒழிப்பதற்குச் சரியான வழிமுறை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாள்வெட்டில் ஈடுபடுவோரை பொதுமக்கள் துரத்திப் பிடிக்க ஆரம்பித்துள்ளமை பொலிஸாருக்கும் ஒரு சவாலான விடயமாக அமைந்துள்ளமையுடன் வாள் வெட்டுச் சந்தேக நபர்கள் மீது பொலிஸார் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கான தூண்டுகோலாகவும் அமைந்துள்ளதாகச் சுமந்திரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

இதன் ஆரம்ப கட்டமாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாள் வெட்டில் ஈடுபட்ட மூவரைக் கலைத்துப் பிடித்துப் பொலிஸாரிடம் கையளித்த பொதுமக்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் என்றும் அவர் கூறினார்.

வாள்வெட்டுப் போன்ற கும்பல் அடாவடித் தனங்களுக்கு எதிராக சுமந்திரன் எம்.பி. பகிரங்கப் பிரசாரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அங்கிருந்த சிலரால் பேரணியில் பங்கேற்க விடாமல் வெளியேற்றப் பட்டமைக்கு யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம் வருத்தம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் அரசியல்வாதிகள் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அது கேட்டுள்ளது.

நேற்றுக் காலை பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளன அலுவலகத்துக்குச் சென்ற மாவை எம்.பி. அங்கு சமாசப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தார். இதன்போது வெளியே நின்ற மீனவர்கள் சிலர், அரசியல்வாதிகள் இங்கு தேவையில்லை. வெளியேறவேண்டும் எனக் கோஷமெழுப்பினர். இதனால் மாவை எம்.பி. அங்கிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெளியேற்றப்பட்டமைக்கு யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் வருத்தம் தெரிவித்துள்ளது.

சம்மேளனத் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் எவரும் வேண்டுமென்று இவ்வாறான செயற்பாடுகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை என்றும், அந்தச் சம்பவத்தையிட்டுத் தாம் வேதனை அடைவதாகவும் தெரிவித்துள்ள சம்மேளனம், இனிவரும் காலங்களிலும் மீனவர் சங்கங்களுடனும் சமூகத்துடனும் அரசியல்வாதிகள் ஒத்துழைத்துச் செயற்படவேண்டுமென்றும் கேட்டுள்ளது. (ஐ-7)

## இராணுவத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவர பல்வேறு கட்சிகளும் அமைப்புக்களும் ஒன்றுகூடின. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன நாட்டில் மாற்றம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றே இந்த ஆட்சியைக் கொண்டுவந்தன.

தற்போது இந்த அரசு ஆட்சிக்குவந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், ஜனாதிபதி இப்போதே அரசு குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விட அதிக பெரும்பான்மை இருந்தது. ஏனெனில், எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசுக்குச் சார்பாகவே செயற்பட்டது.

இப்படியான பலம்வாய்ந்த இந்த அரசை நாம் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தோல்வியடையச் செய்துள்ளோம். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசால் நிரூபிக்க முடியாது போயுள்ளது. அதேபோல், பிரதிச் சபாநாயகர் தெரிவிலும் அரசுக்குக் குறைவான வாக்குகளே கிடைத்தன.

இதிலிருந்து, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் நிராகரித்துவிட்டார்கள் எனும் செய்தியே கூறப்பட்டுள்ளது. மீண்டும் மஹிந்த ஆட்சிக்கு வரவேண்டும் என்பதையே மக்கள் விரும்புகிறார்கள்.

இலங்கை இராணுவத்தை 9 மாகாணங்களுக்குமாகப் பிரிக்க வேண்டும் என்று வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இவ்வாறு இராணுவத்தைப் பிரிக்க வேண்டும் என கூறுவதற்கு இவருக்கு என்ன உரிமை உள்ளது என எவரேனும் ஒருவரால் விசாரணைகளை மேற்கொள்ள முடியுமா? அதற்கான தைரியம் உள்ளதா? இல்லை, இவர்கள் விசாரிக்க மாட்டார்கள். இவர்களுக்கு வடக்கு மக்களின் வாக்குகள் தேவை என்பதால் அதனை ஒருபோதும் மேற்கொள்ள மாட்டார்கள்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் தோல்வியடைவோம் என்று தெரிந்தும் மஹிந்த அன்று தேர்தலை நடத்தினார். அந்த மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர் உறுதியாக இருந்தார். இதேநிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டிருந்தால், நிச்சயமாக தேர்தல் ஒன்று நாட்டில் நடைபெற்றிருக்காது. – என்றார். (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் இலங்கையில் தமது பணியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பவிருக்கிறார். அதையொட்டி பிரியாவிடை சந்திப்புக்காக நேற்று முந்தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு இல்லத்துக்கு சென்றார் அவர்.

இருவரும் சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடினர் எனத் தெரிகின்றது.

அச்சமயம் ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாபய ராஜபக்ஷ நிறுத்தப்படுகின்றமையை அமெரிக்க உட்பட மேற்குலகம் சாதகமாக நோக்காது என்ற தகவலை வெளிப்படையாகவும், பட்டவர்த்தனமாகவும், திட்டவட்டமாகவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார் என மிக நம்பிக்கையான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

உத்தியோக பூர்வ பாணியில் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டு மஹிந்த ராஜபக்ஷ ஆடிப்போய் விட்டார் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

ஜனநாயக அரசியலில் சரளமாகப் பழகக் கூடிய – அனுபவம் வாய்ந்த – அரசியல் முதிர்ச்சியுடைய – ஒருவரையே நாட்டின் தலைவராக சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது என்ற தொனியில் அமெரிக்கத் தூதுவர் கருத்து வெளியிட்டாராம்.

பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது வேறு; ஜனநாயக அரசியலை அதற்குரிய மாண்புகளோடும் பண்புகளோடும் கொண்டு நடத்துவது வேறு என்ற சாரப்பட அமெரிக்கத் தூதுவர் வகுப்பு எடுத்தார் எனவும் கூறப்பட்டது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை களமிறக்குவதற்கு ராஜபக்ஷ குடும்பம் ஒன்றுபட்டு தீர்மானம் எடுத்திருக்கையில் –

அதற்கு சாதகமான சமிஞ்ஞைகளை அவரது மூத்த சகோதரர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மைய நாள்களில் வெளிப்படுத்தி வருகையில் –

அந்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் அமெரிக்கத் தூதுவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கருத்துக் கூறியிருக்கின்றமை ராஜபக்ஷ குடும்பத்தையே அதிர்ச்சியிலும், கலக்கத்திலும் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாயின் இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருக்கும் அவர் தமது அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறக்க வேண்டும். ஆனால், அதற்கு இப்போதைக்கு அமெரிக்க சட்ட பூர்வமான அனுமதி தராது என்றும் –

அவருக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள், மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நியாயமான விசாரணைகள் நடத்தப்பட்டு, தீர்ப்புக் கிடைக்கும் வரை அவரது பிரஜாவுரிமையை இரத்துச் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டை அமெரிக்க தரப்பு எடுக்கும் என்றும் –

பணியை முடித்துக்கொண்டு செல்லும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவரிடம் நேரடியாகவே கூறினார் என்றும் உறுதிப்படுத்த முடிந்தது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர் பேரணிக்குச் சென்றபோது சத்தமிட்டு ரகளை பண்ணி அவரைத் துரத்திவிட்டோம் என்று கொண்டாடும் தரப்புக்களை எண்ணுகையில் இந்தப் பழமொழிதான் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

எது, எப்படியென்றாலும் – இந்தப் பத்தியில் ஏற்கனவே நான் சில தடவைகள் சுட்டிக் காட்டியபடி – மாவை சேனாதிராசாவின் அரசியல் நிலைப்பாடு குறித்தும், அவரது தகுதி, தகைமை, அரசியல் அறிவு நிலை குறித்தும் எவரேனும் தமக்கு விரும்பியபடி விமர்சிக்கலாம். அதற்கு அவர்களுக்கு அரசியல் உரிமையுண்டு.

ஆனால், தமிழர்களின் உரிமைப் போராட்டம் அறவழியினின்றும், மற வழிக்குத் திரும்பிய போது, அந்த வழியில் களமிறங்கி, இன்று எங்கள் மக்கள் அனைவராலும் ஆதர்ஷ புருஷர்களாகப் போற்றப்படும் பெரும் போராளித் தலைவர்கள் பலராலும் அவரவர்களது இளமைப் பருவத்தில் பிரதான வழிகாட்டியாக மதிக்கப்பட்டவர் மாவை சோனாதிராசா என்பது மறுக்கப்பட முடியாதது.

போராட்டத்தின் வரலாற்றை அறிந்தவர்களுக்கு மாவை சேனாதிராசாவின் இளமைப் பருவ இனப் பணி, இனமானத் துடிப்பு, இனப் பற்றுணர்வு எல்லாம் தெரியும்.

அத்தகைய மூத்த அரசியல் தலைவர் ஒருவர் மீனவர் போராட்டத்துக்காக முன்நிற்கையில் அவரைக் கோஷமிட்டு – கும்பலில் கோவிந்தாவாக – mob mentality யுடன் – நிந்திக்கும் இந்த ‘விலாசமேயில்லாத’ பிரகிருதிகள் யார் என்ற கேள்வி எழுகின்றது.

மீனவரின் தற்போதைய போராட்டத்தை ஒட்டி, சில மேம்போக்கான தகவல்களை இந்தப் பத்தியில் நேற்று கோடி காட்டுவதுடன் விட்டுவிட்டேன்.

தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு என்று சத்தமிடுகின்றீர்களே, அவர்கள் இங்கு, எமது தாயகப்பகுதியில் வந்து ஆக்கிரமித்துச் செயற்படுவதற்கு சில மீனவ சங்கத்தினரே இணக்கமும், அனுமதியும், உதவியும் வழங்கி, தங்களது இடங்களை அவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து, அதனை உறுதிப்படுத்திக் கடிதமும் கொடுத்திருக்கின்றார்களே? அதற்கு யாரிடம் சேன்று மக்கள் கத்துவது? தம்பக்கம் குற்றச்சாட்டுக்களை வைத்துக் கொண்டு அரசியல்வாதிகளைத் துரத்துவதற்கு இவர்கள் யார்?

தும்பளை, கற்கோவளம், நாகர்கோயில் கிழக்கு மீனவ சங்கங்கள் உட்பட ஐந்து சங்கங்கள் தென்பகுதி மீனவர் வருகைக்கு இடமளித்து இணக்கமளித்துள்ளனவாமே?

மாவைக்கு எதிராக சத்தமிட்டவர்களுள் முக்கியமானவர் பருத்தித்துறை சமாசத் தலைவர் என்கின்றார்கள். அவர் பிறிதொரு அரசியல் கட்சியின் தீவிர ஆதரவாளராம்.

அவரும் கூட, இழுவைப் படகுகளுக்கும் ட்றோலருக்கும் ஏன் அனுமதி அளிக்கின்றீர்கள், அதை ஏன் தடுக்கவில்லை என்றுதான் அதிகம் கூச்சலிட்டிருக்கின்றார். கடலட்டை பிடிக்கும் ஆக்கிரமிப்பு மீனவர்கள் குறித்து அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லையாம்.

அப்படியாயின் இரண்டு கேள்விகள் எழுகின்றன.

அடிமட்டத்துடன் கடல் வளத்தை வாரிக் கொள்ளையிடும் இழுவைப்படகு மற்றும் ட்றோலர் பாவனைகளுக்கு இதுவரை காலமும் இருந்த தாராள அனுமதியைத் தடுத்து, அதை சட்ட ரீதியாகத் தடை செய்வதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே தமிழ்க் கூட்டமைப்பினர்தானே? மாவையின் வழிகாட்டலில் சுமந்திரன்தானே?

அத்தகைய மாவையை மக்கள் போராட்டத்தில் சத்தமிட்டுத் துரத்துவதற்கு இவர்கள் யார்?

அடுத்தது – கடலட்டை பிடிப் போருக்கு எதிராக சம்பந்தப்பட்டோர் அதிகம் ஆரவாரம் பண்ணாமல் இருந்தமையைப் பார்க்கின்றபோது, மாவையைத் துரத்த வேண்டும் என ரகளை பண்ணியோர் கடலட்டை பிடிப்பதற்காகத் தென்னிலங்கையில் இருந்து வந்தோரை இங்கு கும்பம் வைத்து, வெற்றிலை கொடுத்து, வரவேற்றவர்களில் அடங்குவார்களா என்றும் ஒரு தடவை ‘செக்’ பண்ணிப் பார்க்க வேண்டும்எனத்தோன்றுகின்றது.

“முதலில் போராடப் போகிறோம், வாருங்கள்!” என்றார்கள். கூட்டமைப்பினர் ஆயத்தமாகி, கடந்த வெள்ளியன்று போராட்டம் என்றதும் மீனவ சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பின் வாங்கினர். தென்னிலங்கை மீனவர்களுக்கு கால அவகாசம் வழங்க வேணடும், ஒத்தி வைப்போம் என்றார்கள்.

கூட்டமைப்பு விடவில்லை. மீனவ சங்கங்கள், சமாஜங்கள், சம்மேளனங்கள் வராவிட்டால் நாங்கள் நடத்துவோம் எனத் தீர்மானித்து கூட்டமைப்பே நடத்த முற்பட்டது. கடைசி நேரத்தில் மீனவத் தரப்புகள் இணைந்து கொள்ள கடந்த வெள்ளியன்று மறியல் போர் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

அதற்குப் போட்டியாக சம்மேளனம் நேற்று அரைநாள் கடையடைப்பும் பேரணியும் என்று அறிவித்தது. கடையடைப்பு வெற்றிகரமாக நடக்கவில்லை. ஆனால் அந்தப் போராட்ட முயற்சியை யாரும் எதிர்க்கவுமில்லை.

பேரணி ஏற்பாட்டாளர்கள் மாவை உட்பட ஏனைய அரசியல் தலைவர்கள் அனைவரையும் வருத்தி போராட்டத்துக்கு அழைத்தனர். அழைக்காவிட்டாலும் கூட மாவை போன்ற அரசியல் தலைவர்கள் தமது மக்களின் நியாயமான போராட்டங்களில் தாமாகவே சென்று கலந்து கொள்கின்றமை வழமை.

அப்படியிருக்க, வருத்தி அழைத்தவர்களே, வந்த தலைவர்கள் அவமரியாதைப்படுத்தப்பட்டமைக்குப் பொறுப்பேற்க வேண்டும். அது வெறும் மன்னிப்புக் கோரலாக மட்டும் அமைந்து விடமுடியாது.

போராட்டப் போக்குக்கே அவமானகரமான இத்தகைய செயல்களின் சூத்திரதாரிகளைப் பெயர் குறிப்பிட்டு, பகிரங்கப்படுத்தி, அடையாளப்படுத்துவதுடன்தான் அந்த மன்னிப்பு வரவேண்டும்.

அப்படி இல்லாமல், சூத்திரதாரிகளை மூடிமறைத்துக் கொண்டு ஏற்பாட்டாளர்கள் வெறும் மன்னிப்புக் கோருவது அவர்கள் தங்களுக்குத் தாங்களே வேஷமிட்டுக் கொண்டு நடிக்கின்றார்கள் என்றே அர்த்தப்படுத்தப்படும். அதுதான் உண்மையும் கூட.

முள்ளிவாய்க்காலில் அரசியல்வாதிகளை பலவந்தமாக – அடாத்தாக – ஒதுக்கிய போக்கும் –

நேற்று மாவையை சில அட்டகாசத் தரப்புகள் வெளியேற்றிய பாங்கும் –

இந்த மண்ணில் கௌரவமான அரசியல் கலாசாரத்துக்கு பேராபத்து ஏற்படப் போகின்றது என்பதற்கான முன்னெச்சரிக்கைகள்தாம்.

இது, நல்லதற்கல்ல.

- மின்னல் -

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மக்களுக்கான அரசமைப்பே தேவை

பொதுபலசேனாவின் தலைவரான வண. கலபொட அந்த ஞானசார தேரர் அடிக்கடி சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருபவர்.

குறிப்பாக, சிறுபான்மையினரின் உரிமைகள், சுதந்திரங்கள், அவர்களுக்கான நியாயங்கள் குறித்து குரல் எழுப்புவோரை இலக்கு வைத்தே அவரின் கருத்துகள் பீறிட்டுக் கிளப்பும்.

யுத்த காலத்தில், போர் நடவடிக்கைகளில் இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்துக் குரல் எழுப்பிய ஊடகவியலாளர் பிரகீத் எக்னொலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்டார். அவ்விடயத்தில் பாதுகாப்புத் தரப்புக்கு எதிராகக் குற்றச்சாட்டு விரல் நீள, வண. ஞானசாரர் அதற்கு எதிராகக் கிளம்பினார்.

தமது கணவனுக்காக நீதி கேட்டு நீதிமன்றுக்கு வந்திருந்த எக்னொலிகொடவின் மனைவியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு வண. ஞானசாரருக்கு எதிராக நிரூபிக்கப்பட, அவர் இப்போது நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்.

இந்தச் சமயத்தில் நாட்டின் அரசமைப்புக் குறித்து அவர் ஒரு கருத்து முன்வைத்திருக்கின்றார். பொதுவாக நோக்குமிடத்து அது நியாயமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருப்பதாகத் தோன்றுகின்றது.

இந்த நாட்டின் அரசமைப்பை அரசுத் தலைவர்கள் தமது தேவைகளுக்கு ஏற்ப திருத்திக் கொள்கின்றார்களே தவிர, மக்களின் நலன் குறித்து – அல்லது அதன் அடிப்படையில் – திருத்திக் கொள்வதில்லை என்று சுட்டிக்காட்டுகின்றார் அவர்.

அதாவது, அரசுத் தலைவர்கள் தங்களின் தேவைகள், விருப்புகள், இலக்குகளை அடைய அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றார்கள். மக்கள் நலன்கருதி அல்ல. அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் எல்லாமே அந்தந்தக் காலத்து அரசுத் தலைவர்களின் விருப்புகள், எதிர்பார்ப்புக்களை இலக்கு வைத்தனவாகவே அமைந்தன என்பது முழு உண்மையாகும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அவர் காலாகாலத்துக்கும் அப்பதவியில் இருக்க விரும்பினார். ஓர் ஏக சக்கரவர்த்திபோல அதிகாரத்தைச் செலுத்த ஆசைப்பட்டார். அவரது விருப்பத்தை நிறைவு செய்வதற்கு வசதியாக 18 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதை நிறைவு செய்வதற்காக எம்.பிக்கள் விலைக்கு வாங்கப்பட்டார்கள். பலருக்கு அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகள் வாரி வழங்கப்பட்டன. கட்சித் தகவலும் குதிரைப் பேரமும் தாராளமாக நடந்தன.

நல்லாட்சி அரசு வந்ததும் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதிப் பதவிக்கு வருகின்றமையை நிரந்தரமாக அடைத்து விட வேண்டும் என்ற அவசர தேவை அப்போதைய – தற்போதைய – அரசியல் தலைமைக்கும் அரசுத் தலைமைக்கும் ஏற்பட்டது. உடனடியாக 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு, 18 ஆவது திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல விடயங்கள் நீக்கப்பட்டன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன.

தற்போதைய அரசு தேர்தல்களைச் சந்திக்கப் பின்னடித்து, மாகாண சபைத் தேர்தல்களை காலவரையறையின்றித் தள்ளிப் போட விரும்பியது. அதற்காகவும் அரசமைப்பைத் திருத்த முயற்சி எடுக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்களை புதிய தேர்தல் முறைமையின்கீழ், நாடு முழுவதும் ஒரே சமயத்தில் நடத்துவோம், அதற்கான திருத்தம் என்ற பெயரில் அரசமைப்புக்கு 20 ஆவது திருத்தம் முன்னர் கொண்டு வரப்பட்டது. எனினும் உயர் நீதிமன்றம் அரசமைப்புத் திருத்தத்துக்கான தனது வியாக்கியானத் தீர்ப்பு மூலம் அந்த முயற்சிக்கு ஆப்பு வைத்தது.

இவ்வாறு, வண. ஞானசாரர் தேரர் கூறுகின்றமை போல அரசு மற்றும் அரசியல் தலைவர்களின் தேவைகளுக்காவே இந்த நாட்டின் அரசமைப்பு இதுவரை மாற்றப்பட்டு வந்திருக்கின்றது.

அதை விடுத்து, இந்த நாட்டு மக்களின் தேவைக்காக இந்த அரசமைப்பை மாற்ற முயற்சிக்கக் கூடாதா?

இந்த இலங்கைத் தீவை பெரும் ரணகளமாக்கி, சின்னாபின்னப்படுத்தி, பின்னடைவுக்குள் தள்ளியிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு வசதியாக – ஒரு நியாயமான – இந்த நாட்டின் அனைத்து மக்களையும் அவர்கள் தத்தமது பிரதேசங்களில் கௌரவத்துடனும், தனித்துவத்துடனும், தமது பாரம்பரியங்கள், மரபுகள், வழக்காறுகள், இனத் தனித்துவங்கள் போன்றவற்றை பேணியவாறும் வாழ்வதற்கு வசதி செய்கின்ற – ஓர் அரசமைப்பை நாம் உருவாக்கக் கூடாதா?

அரசமைப்பு உருவாக்கம், திருத்த விடயங்களில் அரசு மற்றும் அரசியல் தலைவர்களைக் குறை கூறும் வண. ஞானசார தேரர் போன்றோரும் கூட, இத்தகைய நீதியான – மக்களுக்கான – ஓர் அரசமைப்பை உருவாக்குவதற்கு ஏன் முயலக்கூடாது? அத்தகைய முயற்சிகளுக்கு ஏன் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது? வெறுமனே அரசு மற்றும் அரசியல் தலைவர்களைக் குறை கூறுகின்றமையை விடுத்து, அதற்கு அப்பால் நகர்ந்து, இத்தகைய மக்களுக்கான அரசமைப்புக்காக ஏன் அவர்கள் ஓங்கிக் குரல் கொடுக்கக் கூடாது?

# ஆசிய பசுபிக் தகவல் தொழில்நுட்ப மாநாடு ஜனாதிபதி தலைமையில்






15ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு நேற்று முதல் 13ஆம் திகதிவரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கொள்கை உருவாக்கம், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக எதிர்நோக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

ஆசிய பசுபிக் தொலைத்தொடர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், இணை உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச, பிராந்திய நிறுவனங்களின் உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு வருகைதந்தவர்களை ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எரிவன் ஹேவோரான்க்சி அம்மையார் வரவேற்றார்.

ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் சங்கத்தின் 15ஆவது தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மாநாட்டின் உப தலைவர் டெப்புவா ஹன்டர் அம்மையார் மாநாட்டைப் பற்றிய விளக்கவுரையை அளித்ததுடன், அங்குரார்ப்பண உரையை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆற்றினார்.

ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எரிவன் ஹேவோரான்க்சி அம்மையாரினால் இதன்போது ஜனாதிபதிக்கு விசேட நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

# தேர்தலுக்குப் பின்னரே சுஜீவவுக்கு வழங்கப்பட்டன 3 காசோலைகள்

## இரகசியப் பொலிஸார் தகவல்

கொழும்பு, ஜூன் 12

டபிள்யு.எம். மெண்டிஸ் நிறுவனத்திடமிருந்து இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள 3 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகள் மூன்றும் கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னரேயே வழங்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் மேற்கொண்டுள்ள மேலதிக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் காசோலைகள் அவரது பாதுகாப்பு அதிகாரிகளினால் மாற்றப்பட்டுள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரிடமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்கு மூலம் பெற்றுள்ளதாகவும் இதன் தொகுப்பு நீதிமன்றத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

118 பேருக்கான பண உதவி தேர்தலுக்காகவே வழங்கப்பட்டது எனவும், தேர்தல் செலவுக்குப் பொதுமக்களும், நிறுவனங்களும் பணம் வழங்குவது சாதாரண ஒரு நடவடிக்கை எனவும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு வந்தன. இந்நிலையிலேயே இந்த உண்மை வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இலங்கைக்கான ரூ.585 மில்லியனை திடீரென இடைநிறுத்தியுள்ளது சீனா

கொழும்பு, ஜூன் 12

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியதால், இலங்கைக்குக் கிடைக்கவிருந்த இறுதித் தவணைப் பணமான, 585 மில்லியன் அமெரிக்க டொலரைத் தற்காலிகமாக இடைநிறுத்த சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தீவுப் பகுதியைப் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த சீனா அனுமதி கோரியிருந்த நிலையில், அதற்கு இலங்கையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, சீனா செலுத்தவேண்டிய இறுதித் தவணைப் பணத்தைச் செலுத்தாது இவ்வாறு தாமதித்து வருவதாகத் தெரியவருகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை, கடந்த வருடம் டிசெம்பர் மாதம், 1.12 பில்லியன் அமெரிக்க டொலருக்கு 99 வருட காலக் குத்தகையின் அடிப்படையில் சீனாவுக்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைநிர்மாணிக்க இலங்கை பெற்றிருந்த கடனை மீளச் செலுத்துவதில் ஏற்பட்ட சிரமத்தின் காரணமாக, இதனைக் குத்தகைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்நிலையில், கடற்படை மற்றும் துறைமுக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் தீவுப் பகுதியைப் பயன்படுத்துமாறு, இலங்கைத் துறைமுக அதிகார சபை சீனாவுக்கு அறிவித்துள்ளபோதிலும், அவர்கள் பணத்தைச் செலுத்துவதில் மேலும் தாமதம் காட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பெற்றதும், இறுதித் தவணைப் பணத்தைச் செலுத்தவுள்ளதாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் குத்தகைக்குப் பெற்றுள்ள, சைனா மெர்ச்சண்ட் போட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# யாழ் வணிகர் கழக புதிய நிர்வாகம் தெரிவு

யாழ் வணிகர் கழகத்தின் பொதுக் கூட்டம் சனிக்கிழமை வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

யாழ் வணிகர் கழகத்தலைவரான இ.ஜனக்குமார், உப தலைவர் இ.ஜெயசேகரன், செயலாளர் சி.கேசவன், உப செயலாளர் ச.சிவலோகேசன், பொருளாளர் சு.தினேசன் ஆகியோர் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 14 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

(இ)

## நாளை

13.06.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : ரோகிணி பி.ப 5.28 வரை
திதி : அமாவாசை பி.இ 2.16 வரை
சுபநேரம் : 4.22 – 5.52 வரை
இராகுகாலம் : 11.52 – 1.22 வரை

# மன்னாரில் நீடிக்கும் அகழ்வுப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டார் ஆயர்







மன்னார், ஜூன் 12

மன்னார் நகர நுழைவாயிலிலுள்ள 'லங்கா சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் நேற்று 11ஆவது நாளாகவும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த அகழ்வு பணியை மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்ரர் சோசை ஆகியோர் நேற்றுக் காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெறும் இந்த அகழ்வுப் பணிகள் விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ தலைமையிலான குழுவினராலும், களனி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், அகழ்வு நடவடிக்கைகளின்போது தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வரும் இந்த மனித எலும்புகளின் பின்னணியில் மர்மம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஊடகங்களால் எனக்கு அநீதி

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 12

ஊடகங்களால் எனக்கு அநீதி ஏற்பட்டது. வேறு எவருக்கும் அப்படியான அநீதியை ஏற்படுத்த இடமளிக்க போவதில்லை என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும்தெரிவிக்கையில்-

ஊடகங்கள் எனக்கு அநீதியை செய்துள்ளன. அதனை மக்கள் அறிந்துள்ளனர். இதனால், வேறு எவருக்கும் அப்படியான அநீதி ஏற்பட இடமளிக்க மாட்டேன்.

ஊடகங்களுக்கும் ஒரு நெறிமுறை இருக்க வேண்டும். என்னுடைய பிரச்சினையை பக்கத்து வீட்டில் கேட்டு பயனில்லை. ஒழுக்க நெறியுடன் பேசவேண்டும். மற்றவர்களின் பிரச்சினைகளை பற்றி என்னிடம் கேட்க வேண்டாம் எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.


# சீன பெண் கைது; கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 12

விசா இன்றி சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த சீனப் பெண்ணொருவரை கைது செய்துள்ளோம் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாலகாரிம மாவத்தையில் வைத்தே இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்ணை அளுத்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# தங்க ஆபரணங்களை கடத்திய பெண் கைது

கொழும்பு, ஜூன் 12

டுபாயிலிருந்து இலங்கைக்கு தங்க ஆபரணங்களைக் கடத்திய பெண்ணொருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

டுபாயிலிருந்து இலங்கைக்கு தங்க ஆபரணங்களைக் கடத்த முற்பட்டபோதே இந்தப் பெண் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வரக்காப் பொலையைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கிலோ 244 கிராம் நிறையுடைய தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் 80 லட்சம் ரூபா பெறுமதியானவை என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், இந்த சந்தேகநபரிடம் சுங்க பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜுன் 12

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**வவுனியாபிரதேசத்தில்** - தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், மடுகந்த, தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மாட்டிறைச்சிக் கடைக்கு நிரந்தரமாகப் பூட்டு!

## மத்துகம பிரதேச சபையில் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 12

மத்துகம பொது சந்தையில் இயங்கி வந்த மாட்டிறைச்சிக் கடையை நிரந்தரமாக மூடுவதற்கான பிரேரணையொன்றை பிவித்துரு ஹெல உறுமயவின் நாரவில சமித்தவஞ்ச தேரர் பிரதேச சபையில் முன்வைத்தார்.

மேலும், மத்துகம பொது சந்தையில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடைக்கு 2019 ஆம் ஆண்டுக்கான அனுமதி பத்திரத்தினை வழங்குவது தொடர்பில் சபையில் வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் அந்தப் பிரேரணையில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த தீர்மானம் தொடர்பில் மத்துகம பிரதேச சபை உறுப்பினர்களுக்கிடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றமையையடுத்து, மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 28 பேர் வாக்களித்ததுடன், மூவர் எதிராகவும், வாக்களித்திருந்தனர்.

மேலும்மூவர்வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. எனினும், அந்தப் பிரேரணை 22 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க)


# சோமவீர சேனாநாயக்கவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி

கொழும்பு, ஜுன் 12

பிரபல எழுத்தாளரான மறைந்த சோமவீர சேனாநாயக்கவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அவரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள பொரலஸ்கமுவயில் அமைந்துள்ள வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு விஜயம் செய்த ஜனாதிபதி பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் குடும்ப அங்கத்தவர்களுக்கும் துறைசார்ந்தவர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

# ரமழான் சிந்தனை



ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் அல்லாஹ் வழங்கிய வெகுமதி, கடந்த ஒரு மாத காலம் நோற்ற நோன்பின் மாண்பினை வளப்படுத்துவோம். வீண்விளையாட்டு கேளிக்கை, மதுபானம் அருந்துதல், போதை வஸ்து பாவித்தலிலிருந்து விடுதலை பெறுவோம்.

| ஸஹர் | சுபஹ் |
|---|---|
| 4.19 | 4.34 |

மஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.29

எம்.எல்.லாபிர்

## கைதடி நுணாவில் கமக்கார அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு

கைதடி நுணாவில் கமக்கார அமைப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர்: சிவசுப்பிரமணியம் லோகதாஸ், செயலாளர்: திருமதி.லோகேஸ்வரன் சிவகௌரி, பொருளாளர்: செல்வி.திருநாவுக்கரசு மதி ஆகியோரும் -

நிர்வாக சபை உறுப்பினர்களாக - இராமலிங்கம் கமலநாதன், அருளம்பலம் தர்மகுலசிங்கம், ஐயாத்துரை கமலநாதன், செல் லப்பா செல்வராசா, புண்ணிய சீலன் சர்வேஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் (12.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. திரியோதசித்திதி காலை 7.34 மணி வரை பின்னர் சதுர்த்தி பி.இ. 4.34 மணி வரை பின்னர். அமாவாசை நட்சத்திரம்: கார்த்திகை இரவு 7.07 மணி வரை. பின்னர் ரோகினி. சித்தாமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.19 மணி முதல் 4.54 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.23 மணி முதல் 11.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை சதுர்த்தி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - கார்த்திகை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர் வீட்டு விருந்து உபசாரத்தில் கலந்துகொள்ள நேரும். பூர்வீகச் சொத்துக்களால் வருமானம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். மனதில் தைரியம் ஏற்படும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். வெளிநாடு செல்ல எண்ணியோர் எண்ணம் நிறைவேறும்.

**மிதுனம்** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழிலில் தேக்கமும், வருமானத்தில் தடையும் ஏற்படும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள், இழப்புக்கள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். இதுவரை இருந்த பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற செலவுகள் கூடும். தொழிலில் ஓரளவு வருமானம் கிடைக்கும். வீண் அலைச்சல்கள் உண்டாகும்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் உயரும். செய்தொழில் விருத்தியாகும். புதிய தொழில் தொடங்குதல், வேலை கிடைத்தல், பதவி உயர்வு பெறுதல் போன்றவை நிகழும். குடும்பத்தில் சுபீட்சம் நிலவும்.

**துலாம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விஷயமாய் நிறைய அலைய வேண்டி வரும். கடன் வாங்க அலைந்து திரிவார்கள். உடல் நலக்குறைவால் சிலர் மருத்துவரின் உதவியை நாடுவார்கள்.

**விருச்சிகம்** மத்திமமான நாள். நினைத்த காரியம் சிரமத்தின் மேல் நிறைவேறும். வெளியாள்கள், நண்பர்களால் தொல்லைகள், இடையூறு, நஷ்டம் உண்டாகும். வெளிநாடு செல்ல இருந்தவர்களுக்கு முயற்சித்தால் அனுகூலமாகும்.

**தனுசு** இன்பமான நாள். வாழ்க்கைத் தரம் உயர்ந்து பொருளாதாரப் பிரச்சினைகள் தீரும். திருமணம் தடைப்பட்டவர்களுக்கு நல்ல வரன் அமையும். வேலை வாய்ப்புக்கள் அமையும்.

**மகரம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். சிலர் காணி வாங்கி புது வீடு கட்டுவார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் லாபம் கிடைக்கும்.

**கும்பம்** குழப்பமான நாள். தொழிலில் அவமானம், பழி சொல், இடையூறுகள் ஏற்படும். மனதிற்கு சலனத்தைத் தரக்கூடிய சம்பவங்கள் நிகழும். குடும்பத்தினரால் மன வருத்தம் உண்டாகும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். எதிரிகள் விலகிப் போவார்கள். நோய்கள் நீங்கும். கஷ்டங்கள் குறையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்; சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம் 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

### கண்புரை (கற்றாக்) சத்திரசிகிச்சைக்கென

# பலாலியில் பரிசோதனை முகாம்; 400 பேர் பங்கேற்பு; 169 பேர் தெரிவு

### அவர்களுக்கு கொழும்பில் இலவசமாக சிகிச்சை









இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைக்கான பரிசோதனை முகாமில் கலந்துகொண்ட நோயாளர்களில் ஒரு தொகையினரையும், இவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றமையையும் படங்களில் காணலாம்.

ஸ்ரீலங்காவின் மிக பிரமாண்டமான கண்புரை (கற்றாக்) சத்திர சிகிச்சைக்கான பரிசோதனை முகாம் பலாலி இராணுவ வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களின் பங்கேற்புடன் இலவசமாக நடத்தப்பட்ட இம் மருத்துவ முகாமுக்கு கண்புரை நோயாளர்கள் 400 பேர் வந்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த முதியவர்களை மையப்படுத்தி இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தள பதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் சிந்தனையில் இம்மனிதாபிமான வேலை திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகியமாவட்டங்களில் இருந்தும் கணிசமான எண்ணிக்கையில் கண்புரை நோயாளர்கள் வருகை தந்திருந்தனர்.

169 நோயாளர்கள் கண்புரைசத்திரசிகிச்சைக்கு அவசியம் உட்படுத்தப்பட வேண்டியவர்களாக வைத்தியநிபுணர்களால் அடையாளம் காணப்பட்டனர். இவர் கள் வருகின்ற 06 ஆம் திகதி முதல் கட்டம் கட் டமாக கொழும் புக்கு அழைத்து செல்லப்பட்டு இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சை வழங்கப்பட்டு வைத்திய கண்காணிப்புக்கு பின்னர் திருப்பி அழைத்து வரப்படுவார்கள். யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் இவர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதாயின் மொத்தமாக ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும் இவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளையும் இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகமே மேற்கொண்டு உள்ளது. இராணுவத்தின் மனித நேய வேலை திட்டங்களுக்கான நாடளாவிய இணைப்பாளர் ஏ. செல்வா, ஒருங்கிணைப்பு பணிகள் அனைத்தையும் முன்னெடுக்கின்றார்.

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கண்புரை நோயாளர்கள் கணிசமான அளவில் காணப் படுகின்றனர். இவர்கள் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு யாழ். போதனா வைத்தியசாலையையே பெரும்பாலும் நம்பி உள்ளனர். ஆனால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளமையால் ஒவ்வொரு நோயாளியும் யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையை பெறுவதற்கு சாதாரணமாக மூன்று மாதங்களுக்கு மேல் காத்திருக்க நேர்கின்றது.

கண்புரை நோயாளர்கள் இதனால் எதிர்கொள்ள நேர்ந்து இருக்கின்ற இடர்ப்பாடுகள் குறித்து இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சிக்கு ஏ. செல்வா தெரியப்படுத்தியமையை அடுத்தே வட மாகாணத்தை குறிப்பாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கண்புரை நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்று விசேட வைத்திய நிபுணர்கள் மூலம் இலவச சத்திர சிகிச்சை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டு துப்பாக்கிகளுடன் 10 பேர் கைது

மொனராகலை எத்திமலை பகுதியில் 4 நாட்டு துப்பாக்கிகளுடன் பத்து பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை எத்திமலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 முதல் 75 வயதுக் கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர்களிடமிருந்து மிருகங்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என எத்திமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவன் பிறேமதாஸ் பிரசன்னா 2017 க.பொ.த (சா/த) பரீட்சையில் 6 ஏபிசி பெற்று உயிரியல் பிரிவில் கல்வி கற்று வருகின்றார். இவரின் குடும்ப நிலை கருதி அவருக்கு நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் 'உதவும் கரங்கள்' அமைப்பினர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவின் ஆசியுடன் சைக்கிள் ஒன்றை வழங்கி ஊக்குவித்துள்ளனர். அன்றைய தினமே இருபாலையைச் சேர்ந்த வலுவிழந்தவரான (கால்/கண்) ஸ்ரீகாந் என்பவருடைய குடும்பத்தினருக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கி உதவியுள்ளனர். (இ

# கோட்டாபய களமிறங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது

கொழும்பு, ஜுன் 12

பொது எதிரணி என்பது தனிப்பட்ட கட்சியல்ல. அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பொது தீர்மானங்களையே எடுக்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கூட்டு எதிரணியினரால் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய அரசாங்கம் நாளுக்கு நாள் பலவீனமடைந்து செல்கிறது. இதன் காரணமாக கூட்டு எதிரணியினர் பலம் அதிகரித்துள்ளது. மக்களின் ஆதரவு கட்சிக்கு மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதே தவிர ஒரு சில உறுப்பினர்களுக்கு அல்ல என்ற விடயத்தினைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை பொது வேட்பாளராக களமிறக்க விருப்பங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

மக்களின் ஆதரவு பெற்ற ஒருவரையே வேட்பாளராக களமிறக்க வேண்டும். இவ் விடயம் தொடர்பில் பொது எதிரணியினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.



வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை களமிறக்க முடிவுகள் எடுக்கப்பட்டமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பொது எதிரணியினர் தன்னிச்சையாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.

ஏனென்றால் பொது எதிரணி என்பது தனிப்பட்ட கட்சியல்ல அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து பொது தீர்மானம் எட்டப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு இலவச விதை நெல்!

கொழும்பு, ஜுன் 12

இரசாயன உரப் பாவனையின்றி, இயற்கைப் பசளைகளைப் பாவிக்கும் விவசாயிகளுக்கு, இலவசமாக விதை நெல்லை வழங்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக 20 ஆயிரம் விவசாயிகளை இணைத்துக் கொள்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இயற்கை



உரப் பாவனையில் ஐயாயிரம் விவசாயிகள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு இரண்டு லட்சம் தென்னங்கன்றுகள்

கொழும்பு, ஜுன் 12

குருநாகல் மாவட்டத்தில் உள்ள சிறிய தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு இரண்டு லட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் மாவட்டத்தில் உள்ள 18 ஆயிரம் விவசாயிகளுக்கு இவை பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன என்று மாவட்ட தெங்கு பயிர்ச் செய்கைச் சபை தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்ட விவசாயிகளுக்கு, தென்னங்கன்றுகளுக்கான



உரமானியமும் வழங்கப்படும் என்றும் தெங்குப் பயிர்ச் செய்கை சபை அறிவித்துள்ளது.

### கரையோரப் பகுதியில்

## சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

நீர்கொழும்பு மற்றும் தெஹிவளை - கல்கிஸை கரையோரப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் அகற்றப்படவுள்ளன.

இதுதொடர்பாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவிக்கையில்–

நாட்டைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதியில் உள்ள சட்டவிரோதக் கட்டடங்கள் அனைத்தும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் கீழ், மிரிஸ்ஸ கரையோரப் பகுதியில் உள்ள சட்டவிரோதக்



கட்டடங்கள் அண்மையில் அகற்றப்பட்டன.

கரையோரப் பாதுகாப்புச் சட்டத்துக்கு அமைய, கடுமையான சட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

## 10 லட்சம் பலா மரக்கன்றுகளை நடும் திட்டம் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஜுன் 12

'நாம் வளர்ப்போம் - நாம் உண்ணுவோம்' என்ற துரித விவசாய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஆரம்ப கட்டமாக 10 லட்சம் பலா மரக்கன்றுகளை நடும் திட்டம் நேற்று ஆரம்பமானது.

இது தொடர்பான பிரதான வைபவம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் பாணந்துறை - ஜெரமியஸ் தியஸ் கனிஷ்ட பாடசாலையில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

ஆதர் வி தியஸின் பலா மறுமலர்ச்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 100 வருடங்களாகின்றன. இதனை



முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# களுத்துறையில் 460 கோடி ரூபா செலவில் சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலை

கொழும்பு, ஜுன் 12

நெதர்லாந்து நிதியுதவியின் கீழ், பூரண வசதிகளைக் கொண்ட சிறுவர்களுக்கான வைத்தியசாலையொன்று களுத்துறை பெரியாஸ்பத்திரி வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

தாய்-சேய் விடுதி தொகுதியுடன் இது அமைக்கப்பட உள்ளது- இந்த வைத்தியசாலைக்காக 460 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

களுத்துறை பெரியாஸ்பத்திரியின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசு மேலும் 1,150 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் முழு வசதிகளைக் கொண்ட கண் வைத்தியசாலையொன்றும் இங்கு அமைக்கப்படும்.



'சுவசெரிய' என்ற அம்புலன்ஸ் சேவை தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது. விபத்துக்களின்போது பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் விமான அவசர சேவையும் ஆரம்பிக்கப்படும்.

இந்த பெரியாஸ்பத்திரியில் விபத்துச்சேவைப் பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 1 மாத காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்டோர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர் என்றும் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir













யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இயற்கை வலுவூட்டல் கழகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை சபாலிங்கம் மண்டபத்தில் சுற்று சூழல் தின நிகழ்வு கல்லூரி அதிபர் சதா. நிமலன் தலைமையில் கொண்டாடப்பட்டது. அதில் சுற்றாடல் உத்தியோகத்தர் குலேந்திராசிவேந்திரம் கலந்து சிறப்பித்தார்.

சுற்றாடல் தின பொதுஅறிவுப் போட்டிக்கான பரிசில் வழங்கல், சுற்றாடல் முன்னோடிகளுக்கான பதக்கம் வழங்கல் மற்றும் விவாதம் போன்ற நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன.

கழக பொறுப்பாசிரியர்கள் திருமதி. யா. ரவீந்திரன், திருமதி. யா. மதீபன் ஆகியோரின் வழிகாட்டலில் கழக தலைவர் செல்வன். ரு. அப்ஜுன் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து விழாவை சிறப்பாக நடத்தியிருந்தார்.

(இ







லண்டன் நூல் தேட்டம் நூலகர் என். செல்வராஜாவின் 'தீவகம்' நூல் வெளியீடு யாழ். நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிறன்று நடைபெற்றபோது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு முதற்பிரதியை தொழில் அதிபர் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்துக்கு வழங்குகின்றமையையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (இ-19)

**படங்கள் - எம்.எல்.லாபிர்**

# நெடுந்தீவு பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

நெடுந்தீவு பிரதேசசபையின் உபதவிசாளர் சண்முகம் லோகேஸ்வரன் சுகவீனம் காரணமாக காலமாகிய நிலையில், அவரது வெற்றிடத்திற்கு அவர் போட்டியிட்டு வெற்றி பெற்ற நெடுந்தீவு மேற்கு தேர்தல் வட்டாரம் மூன்றில் விகிதாசாரப் பட்டியலில் போட்டியிட்ட சமூக சேவையாளரான இராசலிங்கம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்சியால்; சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அவரது சத்தியப்பிரமாண நிகழ்வும் பதவிப்பிரமாண நிகழ்வும் யாழ் மாட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரியாலயத்தில் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம், கட்சியின் யாழ் மாவட்ட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றன. (இ









வேலணை புளியங்கூடல் செருத்தனைபதி ஸ்ரீ இராஜ மகா மாரியம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் கொடியேற்ற வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது...

(இ

# அண்மைக்கால வெள்ள அனர்த்தம்

# முக்கிய காரணம் பிளாஸ்டிக் கழிவுகளே!



புதிய விஞ்ஞான ஆய்வுகள் மூலம் பிளாஸ்ரிக் எமது நாட்டில் சூழல் பாதிப்பை அதிகமாக ஏற்படுத்துகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய சுற்றாடல் அதிகாரசபையும் களனிப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் சிலரும் நடத்திய ஆய்வுகளின்படி ஒரு நாளைக்கு 50 இலட்சம் பிளாஸ்ரிக் போத்தல்கள் சூழலில் போடப்படுகின்றன. அதே போல் நாளொன்றுக்கு 200 லட்சம் ஷொப்பிங் பைகள், 150 லட்சம் லஞ்ச் சீற்றுகள் எமது சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

கடந்த நாள்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் தொடர்பாக சூழலியலாளர்கள் நடத்திய ஆய்வில் கம்பஹா, புத்தளம், குருநாகல் போன்ற பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட பிரதான காரணம் பிளாஸ்ரிக் கழிவுகள் வடிகான்களின் நீர் பாதையை அடைந்திருந்தமை ஆகும்.

குறிப்பாக பிரதான நகரங்களில் அதிகளவான மழை பெய்தவுடன் வடிகான்களில் சென்று பிளாஸ்ரிக் அடைத்துக் கொண்டவுடன் நீர் வடிந்தோடுவது தடைப்பட்டு வெள்ளம் ஏற்படுகின்றது.

சர்வதேச பிரபல்யம் வாய்ந்த 'சயன்ஸ்' சஞ்சிகையில் 2015ம் ஆண்டு சஞ்சிகையொன்றில் அமெரிக்காவின் ஜோர்ஜியா பல்கலைக்கழகத்தின் ஜெனா ஜெம் பொக் எனும் சூழலியல் விஞ்ஞானி எழுதிய கட்டுரையில், இலங்கை கடற்பிரதேசமும் கடற்கரையும் பிளாஸ்ரிக் கழிவுகளால் மாசடைதலின் ஐந்தாம் இடத்தைப் பெறுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையின்படி, எமது நாட்டைச் சூழவுள்ள கடற்கரைகளின் மூலம் 10 இலட்சம் இறாத்தல் பிளாஸ்ரிக் கழிவுகள் கடலை அடைகின்றன. எவ்வாறாயினும் சமுத்திரச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் ருகுணு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டர்னி பிரதீப்குமார இந்நாட்டின் பிரதான நதிகள் மற்றும் உல்லாசப் பிரயாண வலயங்களின் பிளாஸ்ரிக்குகள் மூலமாகவே கடலானது அதிகளவு மாசடை கின்றது எனக் குறிப்பிடுகின்றார். அதனைத் தடுக்க தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் டர்னி கூறினார்.

> குழந்தைகளுக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்ல பிளாஸ்ரிக் போத்தல்களை வாங்கும்போது அதன் கீழ்ப்புறம் 1–2–3 என இலக்கம் குறிப்பிடப்பட்ட போத்தல்களில் நீரை நிரப்புவது சுகாதாரமற்ற தாகும். 4–5 என இலக்கம் குறிப்பிட்ட போத்தல்களில் மாத்திரமே பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீரைக் கொண்டு செல்ல வேண்டுமென வைத்திய நிபுணர் வருண குணதிலக்க கூறினார். பெரியவர்களும் 4–5 இலக்கம் இடப்பட்ட பிளாஸ்ரிக் போத்தகளையே பாவிக்க வேண்டும்.


எமது நாட்டில் சிவனொளிபாதமலை யாத்திரையின்போது, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் ஐந்து மெற்றிக் தொன் கழிவாக அகற்றப்படும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக உயர் நீர்வளங்களின் பாதுகாப்புத் திட்டத்தின் முன்னாள் பணிப்பாளர் டி. பீ. முனவீர கூறியுள்ளார்.

உலகில் பல நாடுகள் பொலித்தீனை தடை செய்துள்ளன. அவர்கள் கடதாசி மற்றும் காட்போட் பைகளை பாவிக்கின்றார்கள். எம்மாலும் பொலித்தீனை தடை செய்ய முடியும். எமக்கு இயற்கையே மாற்றுவழிகளைத் தந்துள்ளது. துணிப் பைகள், கண்ணாடிப் போத்தல்கள், வாழை இலை என்பவற்றை நாம் பாவிக்கலாம். பிளாஸ்ரிக் பாத்திரங்களுக்குப் பதிலாக மண் பாத்திரங்களை பாவிக்கலாம். உக்கக் கூடிய பிளாஸ்ரிக் என்று எதுவும் இல்லை. உக்குவது என்றால் நீரை உறிஞ்ச வேண்டும்.

பிளாஸ்ரிக் பாத்திரங்களில், பொலித்தீனில் எதையேனும் இட்டால் சிறிது நேரத்தில் அதனுள்ளே காமா கதிர்கள் உருவாகும். அதன் காரணமாக பிளாஸ்ரிக் வெப்பமடைந்து பொருள்கள் புற்றுநோய் காரணிகளாக மாறிவிடுகின்றன. காமா கதிர்கள் மூலம் சயனைட் நஞ்சும் வேறு நஞ்சு வகைகளும் உருவாகின்றன. பிளாஸ்ரிக் போத்தல்களில் சுடுநீர், பெற்றோல், ஊறுகாய், தேநீர், புளிப்புச் சுவையுள்ள பானங்கள், தேங்காயெண்ணெய் என்பவற்றை இட்டு உணவாகப் பாவிப்பதனால் புற்றுநோய் காரணிகள் உள்ளிட்ட நச்சுக்கள் உருவாகி உடம்பில் சேருமென டீ. பீ. முனவீர கூறுகின்றார்.

புதிய கண்டுபிடிப்புகளின்படி பொலித்தீன், பிளாஸ்ரிக், உற்பத்தி செய்யும் போதே சூழல் மாசடைகின்றது. 50,000 பொலித்தீன் பைகளை உருவாக்கும் போது 17 கிலோ கிராம் சல்பர்டை ஒக்சைட் வளிமண்டலத்துக்கு வெளியிடப்படுகின்றது என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பிளாஸ்ரிக் என்னும் பெயர் 'பிளாஸ்ட் கோஸ்' என்னும் கிரேக்க மொழியிலிருந்தே உருவாகியுள்ளது. மசகு எண்ணெய் உற்பத்தியின் போது பக்க விளைவுகளாக தோன்றும் பொலிஸ்டரீன், பொலிஎத்தலின், பொலி சயிலை குளோரைட் பொலிக்காவனேற்று என்பன பிளாஸ்ரிக்கிலும் பொலித்தீனிலும் உள்ளடக்குகின்றன.



எவ்வாறாயினும் மரங்களைப் பாதுகாப்போம் என்னும் நோக்கத்துக்காக நண்பனாக வந்த பிளாஸ்ரிக் தற்போது விரோதியாக மாறியுள்ளது. எமது நாட்டில் வீடுகளைச் சுத்தம் செய்யும் போது வீட்டுக்கருகிலேயே அவற்றை எரிக்கின்றோம். அப்போது வெளிவிடப்படும் புகையில் அதிகமாகக் காணப்படுவது புற்றுநோய் காரணிகளேயாகும். சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில் பயிற்சி சுகாதார தொடர்பான வைத்திய நிபுணர் இனோகா சுரவீர பிளாஸ்ரிக்கை எரிக்கும் போது வெளியிடப்படும் வாயு மாசடைவதால் மரணம் கூட சம்பவிக்கலாம் எனக் கூறியுள்ளார்.

இன்று எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிளாஸ்ரிக் விலங்கினங்களுக்கும் இயமனாக மாறியுள்ளது. எமது நாட்டில் யானைகளின் மரணம் குறித்த விசாரணைகளை நடத்திய முன்னாள் வன விலங்குப் பணிப்பாளர் டொக்டர் தந்தா அத்தபத்து யானைகளின் குடலில் அதிகளவு பிளாஸ்ரிக் காணப்பட்டதாகக் கூறியுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் பிளாஸ்ரிக் பொலித்தீன் மீள்சுழற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மகிழ்ச்சியான விடயமாகும். ஹோமாகம பிரதேச சபை செயற்படுத்தும் திட்டம் காரணமாக பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் பிளாஸ்ரிக் பொலித்தீன் பிரச்சினை குறைவாகவுள்ளது.

குழந்தைகளுக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்ல பிளாஸ்ரிக் போத்தல்களை வாங்கும்போது அதன் கீழ்ப்புறம் 1–2–3 என இலக்கம் குறிப்பிடப்பட்ட போத்தல்களில் நீரை நிரப்புவது சுகாதாரமற்றதாகும். 4–5 என இலக்கம் குறிப்பிட்ட போத்தல்களில் மாத்திரமே பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீரைக் கொண்டு செல்ல வேண்டுமென வைத்திய நிபுணர் வருண குணதிலக்க கூறினார். பெரியவர்களும் 4–5 இலக்கம் இடப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்களையே பாவிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் எந்தவகையான பிளாஸ்ரிக் பாத்திரங்களாக இருந்தாலும் உணவுப் பண்டங்கள், பானங்கள் என்பவற்றை அவற்றில் இட்டால் சூரிய ஒளிபடுவதைத் தவிர்க்க வேண்டும். சூரிய ஒளியுடன் பிளாஸ்ரிக் தாக்கமடைந்து அதன் விளைவாக உணவானது நஞ்சூட்டப்படலாம். இதற்கு ஒரே தீர்வு பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதாகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்நாட்டில் அதிகமாக பாவிக்கப்படும் தரமற்ற தண்ணீர் போத்தல்களையும் பிளாஸ்ரிக்கையும் தடை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை கூறியுள்ளது.

தாங்கள் மேற்கொண்டுள்ள பல நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளதாகவும் தடை செய்யப்பட்ட பொலித்தீனை கைப்பற்றவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை கழிவு முகாமைத்துவப் பணிப்பாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்தார். ★

---

# சமுர்த்திப் பயனாளிகளுக்குப் புதிய கடன் திட்டம்



கொழும்பு, ஜூன் 12

சமுர்த்தி பயனாளிகளின் முதலீடுகள் குறித்து மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் மூலம், புதிய கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி, சமுர்த்திப் பயனாளிகளுக்கு கூடுதல் கடன் தொகையை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்று சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

அனைத்து சமுர்த்தி வங்கிகளிலும், தகவல் தொழில்நுட்பத்தின் கீழ், ஒன்றிணைத்து வைப்பீட்டாளர்களுக்கு, வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முறையான முகாமைத்துவத்தின் கீழ் வைப்பீட்டாளர்கள், வங்கி மீது கொண்டுள்ள நம்பிக்கை மேலும் அதிகரித்ததனால், 2016 ஆம் ஆண்டிலும் பார்க்க 2017 ஆம் ஆண்டு சமுர்த்தி வங்கியின் வருமானம் அதிகரித்திருப்பதாகவும் சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஜே.தடல்லகே கூறினார்.



# கல்விக் கதிர் வெளியீடு

தரம்-5

## இலங்கை தொடர்பான தகவல்கள்

1. இலங்கையின் அதிகாரப் பெயர் :- இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
2. தலைநகரம் :- ஸ்ரீ ஜெயவர்த்தனபுர
3. பெரிய நகரம் :- கொழும்பு
4. அமைவிடம் :- தெற்கு ஆசியா
5. சிறப்புப் பெயர் :- இந்து சமுத்திரத்தின் முத்து/ நித்திலம்
6. எல்லைகள் :- அகலாங்கு - $5^{0}$ 55' - $9^{0}$ 51'
   நெட்டாங்கு -$79^{0}$ 42' - $81^{0}$ 52'
7. நீளம் :- 432 Km (270 மைல்)
8. அகலம் :- 224 Km (140 மைல்)
9. பரப்ளவு :- 65,610 $Km^2$
10. சுற்றளவு :- 1340 Km
11. நிலம் :- 64630 $Km^2$
12. நீர் :- 2905 $Km^2$
13. ஆகக் கூடிய உயரம் :- 2524 மீற்றர் (8281 அடி) (பீதுறுதாலகால மலை)
14. எழுத்தறிவு வீதம் :- 92.3%
15. நாணயம் (LKR[1]) :- இலங்கை ரூபா
16. நேர வலயம் :- G.M.T [2] + 05.30
17. இணைய குறி :- .டம
18. தொலைபேசி :- +94
19. மின்னழுத்தம் :- 230V
20. அலையெண் :- 50Hz

## இலங்கையின் தேசியம்

1. தேசிய கீதம் :- "நமோ நமோ தாயே"
   * சிங்களத்தில் இயற்றியவர் :- ஆனந்த சமரக்கோன் (1948 இல்)
   * தமிழில் மொழிபெயர்த்தவர் :- புலவர்மணி நல்லதம்பிப்பிள்ளை
   * ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு :- C.W.W. கன்னங்கர
2. தேசியக் கொடி :- வாளேந்திய சிங்கம்
   (1950 இல் வடிவமைத்தவர் கேர்ணல் ஒல்கொட்)
3. தேசிய மலர் :- நீல அல்லி (1956 பெப்ரவரி 06)
4. தேசிய மரம் :- நாக மரம் (1986)
5. தேசிய பறவை :- காட்டுக் கோழி
6. தேசிய பறவை :- மர அணில் / யானை
7. தேசிய விளையாட்டு :- கரப்பந்தாட்டம், எல்லே
8. தேசிய புனித மரம் :- வெள்ளரசு
9. தேசிய உணவு :- பாற்சோறு
10. தேச பிதா :- டி.எஸ். சேனநாயக்க
11. சுதந்திர தினம் :- பெப்ரவரி 04
    (சுதந்திரம் 1948 ஐக்கிய இராச்சியத்திடமிருந்து)
12. குடியரசுத் தினம்/ தேசிய வீரர்கள் தினம் :- மே 22 (1972 முதல்)
13. தேசிய வீரர்கள் :-

1. டி.எஸ். சேனநாயக்க



2. சேர். பொன்னம்பலம் இராநாதன்



3. டீ.பீ.ஜயத்திலக






## புள்ளிகளை இணையுங்கள்






## பொறுமைக்கும், நற்பண்புக்கும் கிடைத்த பரிசு

தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோதகத்தை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்! என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே இரு என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாள்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி. தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த மோதகத்தைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. ஐயா! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளுங்கள்! என்றாள். அவள். மகளே! உன் பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிருசாம்பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல் என்றார் செல்வர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன்னாள்.

எனவே, நாமும் பொறுமையாகவும், நேர்மையாகவும் இருந்தால் பெரியோர்களின் பரிசில்களைப் பெறலாம்



### தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

### தாமரை கோபுரத்தில் இருந்து விழுந்து மரணித்த

# மாணவனின் உடலை கொண்டு வந்து சேர்க்க இலவசம் எனக் கூறி ரூ.35 ஆயிரம் கறப்பு

தாமரைகோபுரத்தில்இருந்து வீழ்ந்து இறந்த கிளிநொச்சி மாணவன் கோணேஸ்வரன் நிதர்சனின் உடலை கிளிநொச்சிக்கு இலவசமாகக் கொண்டு வருவதாக தெரிவித்து பின்னர் முப்பதாயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்தஎட்டாம்திகதிகொழும்பு தாமரை கோபுரத்திலிருந்து வீழ்ந்து மரணமான மாணவனின் உடலை கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வருவதற்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் வாகனத்தை இலவசமாக ஏற்பாடு செய்து தருகிறோம் எனப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளார்.




பின்னர் சற்று தாமதித்து மாணவனின் குடும்பத்தினரிடம் தொடர்புகொண்டுபிரதேசசபை உறுப்பினர் வாகனத்திற்கான எரிபொருளை மாத்திரம் வழங்குமாறு கோரியிருந்தார். இதற்கு குடும்பத்தினர் சம்மதித்திருந்தனர்.

இதன் பின்னர் வாகனம் கொழும்புசென்று மாணவனின் உடலை ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் உள்ள அவரது வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னர் வாகன கூலியாக முப்பதாயிரத்தை வழங்குமாறு கூறிப் பணத்தையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

வழமையாக கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு இவ்வாறானஒருதேவைக்குவாகனத்தை பிடிப்பதாக இருந்தால் இருபதாயிரம் ரூபாவுக்கு பிடித்திருக்க முடியும் என்றும் இதனை விட தங்களின் நிலைமையினை கருத்தில் கொண்டு பலர் மாணவனின்உடலைக்கொண்டுவருவதற்கு உதவ தயாராக இருந்த நிலையில் இவர்கள் இப்படி நடந்து கொண்டது கவலையளிக்கிறது என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்திலேயே தங்களிடம் உண்மையை கூறியிருந்தால் தாங்கள் அதற்கேற்ற ஒழுங்கை மேற்கொண்டிருப்போம் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் செயலாளரைத்தொடர்புகொண்டுவினவிய போது மாணவனின் உடலை கிளிநொச்சி கொண்டு வர வாகனத்தை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கோரியிருந்தார்.

அவரிடம் நான் தெளிவாகவே வாகன கூலி முப்பதாயிரம் எனத் தெரிவித்திருந்தேன். அதனையே நாங்கள் பெற்றுக் கொண்டோம். எங்களுக்கும் மாணவனின் குடும்பத்தினருக்கும் இடையில் எவ்வித தொடர்பாடலும்கிடையாது என்று தெரிவித்தார்.

மரணமான மாணவன் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இவ்வருடம் உயிரியல் தொழிநுட்பபிரிவில்பரீட்சைக்குதோற்ற இருந்தார். இவரது குடும்பத்தினர் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் குடும்பத்தில் காணப்படுகின்றனர். தந்தை சிறு தொழில் முயற்சி ஒன்றில் ஈடுபடுகின்றார்.தாய் சமீபத்தில் ஆசிரிய தொழிலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

மாணவன் தனது பொருளாதார தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவே தொழிலுக்கு சென்ற நிலையில் இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு நடமாடும் விஞ்ஞான ஆய்வு கூட வசதிக்கும் ஏற்பாடு செய்யப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கென அரசு 25 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் அவர் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் மேலும் 30 கோடி ரூபா இதற்கென வழங்கத் தீர்மானித்துள்ளோம்.



அனைத்துப் பாடசாலைகளுக்கும் தலா இரண்டு ஏக்கர் வீதம் காணிப் பெற்றுக்கொடுக்கப்படும். இதனூடாக பாடசாலைகளுக்கான காணியின் தேவை பூர்த்திசெய்யப்படுமெனவும் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (க)



உலகின் முதல்தர தலைமைத்துவப் பயிற்றுவிப்பாளரான ஜோன் மெட்டோன் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இலங்கையில் நடைபெற உள்ள பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் இரு கூட்டங்களில் பங்கேற்பதற்காகவே அவர் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இந்த இரு கூட்டங்களையும் ஸ்லிம் (SLIM) நிறுவனம் இன்றும் நாளையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஜோன் மெட்டோன் பிரபல அப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜொப்ஸின் பயிற்றுவிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 20 ஆவது திருத்தம் குறித்து ஆராயாமல் அதனை நடைமுறைப்படுத்த முடியாது!

### அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 12

மக்கள் விடுதலை முன்னணியினர் முன்வைத்துள்ள 20 ஆவது சீர்திருத்தம் தொடர்பில் இதுவரை ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில், அதன் கொள்கைகளை ஆராய்ந்து பார்க்காது அந்தத்திருத்தத்தைநடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க முடியாது என சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய அரசின் நோக்கம் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து



அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதாகும். ஆனால் நல்லாட்சி அரசும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து எதிர் தரப்பின் பெரிய எதிர்ப்புக்களைச் சந்தித்த வண்ணமே உள்ளது. அதில் ஒன்றாக மக்கள் விடுதலை முன்னணியினர் முன்வைத்துள்ள 20 ஆவது சீர்திருத்தமும் அமைகிறது.

தேசிய அரசை வீழ்த்தும் நோக்குடனேயே இந்த திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இத் திருத்தம் குறித்து கலந்துரையாட வேண்டும். அத்துடன்சீர்திருத்தத்தின்கொள்கைகள் தொடர்பாக ஆய்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

எனவே, இவ்வாறான ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளாது, சீர்திருத்தம் குறித்துக் கலந்துரையாடாமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாதையை சீரமைக்க கோரி 2 ஆயிரம் பேர் போராட்டம்

கொழும்பு, ஜூன் 12

லுணுகலை பிரதான பாதையை அகலமாக்கி சீரமைத்து தருமாறு கோரி லுணுகலை நகரில் மக்கள் சுமார் 2000 பேர் பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று பகல் மேற்கொண்டிருந்தனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டோர் பாதையை வழிமறைத்து அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தமையால் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டது.

போராட்டக்காரர்கள் லுணுகலைப் பிரதேச செயலாளர் டீ.எல்.எச். திசாநாயக்கவிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். அதனையடுத்து அவர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அழுத்தம் கொடுத்து பாதையை சீரமைத்துத் தருவதற்கும் உறுதியளித்தமை காரணமாகப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இப்போராட்டத்தின் போது ஓட்டோக்கள் பலவும் நிறுத்தப்பட்டன. பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

# ட்ரம்புடன் சிங்கப்பூர் பிரதமர் சந்திப்பு; இருநாட்டு உறவுகள் குறித்து பேச்சு

சிங்கப்பூர் சிற்றி, ஜூன் 12

வடகொரிய ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்காக சிங்கப்பூர் சென்றுள்ள ட்ரம்ப், நேற்று சிங்கப்பூர் பிரதமரைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் – வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் இன்று காலை 9 மணியளவில் சிங்கப்பூரின் பிரபலமான சுற்றுலாத்தலமான சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா ஹோட்டலில் சந்தித்து பேச்சு நடத்துகின்றனர்.





உலக நாடுகள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் சிங்கப்பூர் சென்றடைந்தார்.

சிங்கப்பூர் நாட்டின், பயலேபார் விமான தளத்திற்கு வந்தடைந்த அவரை, சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் வரவேற்றார்.

இந்த நிலையில், சிங்கப்பூர் அதிபரின் அதிகாரபூர்வ மாளிகையான இஸ்தானாவில் நேற்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் லீ செய்ன் லூங் ட்ரம்பை வரவேற்று அழைத்துச் சென்றார். ட்ரம்புடன் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன், வெள்ளை மாளிகை ஊடகப்பிரிவு செயலாளர் சாரா மற்றும் அதிகாரிகள் சென்றனர்.

இதையடுத்து இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து லீ செய்ன் லூங், ட்ரம்ப் பேச்சு நடத்தினர். பின்னர் ட்ரம்ப் மற்றும் அவருடன் சென்ற குழுவினருக்கு பிரதமர் லீ மதிய விருந்து அளித்தார். (கு)

## வாக்குப்பதிவு பகுதியில் தீவிபத்து; திட்டமிட்ட சதி என்கிறார் ஈராக் பிரதமர்

பக்தாத், ஜூன் 12

ஈராக் தலைநகர் பாக்தாதில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரம் வைத்துள்ள பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து திட்டமிட்ட சதி என ஈராக் பிரதமர் ஹைதர் அலி அல்பாதி தெரிவித்துள்ளார்.

ஈராக் நாட்டு தலைநகர் பாக்தாத்தில் சமீபத்தில் நடந்த தேர்தலில் பதிவான வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த பகுதியில் நேற்றுமுன்தினம் திடீரென தீ பிடித்து விபத்து ஏற்பட்டது.

தீ விபத்தை அறிந்த அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு அங்கிருந்த வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பத்திரமாக மீட்டனர்.

இந்த நிலையில், ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரம் வைத்துள்ள பகுதியில் ஏற்பட்ட தீவிபத்து திட்டமிட்ட சதி என ஈராக் பிரதமர் ஹைதர் அலி அல்பாதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில் –

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து திட்டமிட்ட சதி. இதில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மறு எண்ணிக்கை நடத்த வேண்டும் என அரசு முடிவு செய்திருந்த நிலையில் தீ விபத்து நடந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் தலிபான் தாக்குதல்

காபூல், ஜூன் 12

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜலாலாபாத் நகரில் தலிபான் பயங்கரவாதிகளின் வெடி குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த 15 பேர் பலியாகியுள்ளனர்.


15 பேர் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டில் அந்த நாட்டின் அரசுக்கும், தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் பல ஆண்டுகளாக போர் நடந்துவருகிறது. இதுவரை ஏராளமான பொது மக்களும், பாதுகாப்புப் படை வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளையும் தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றி போட்டி அரசு ஒன்றை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடு என்பதால் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு 5 நாள் தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கு அந்த நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கனி அழைப்பு விடுத்திருந்தார்.

அவரது அழைப்பை ஏற்ற தலிபான் அமைப்பு 3 நாள் போர் நிறுத்தத்துக்கு சம்மதிப்பதாக ஒப்புக்கொண்டு இருந்தது. ஆனால், தலிபான் ஒப்புக்கொண்ட 3 நாள் போர் நிறுத்தம் என்று துவங்கும் என்பது குறித்த அறிவிப்பை தலிபான்அமைப்புவெளியிடவில்லை.

இந்த நிலையில், நேற்று ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் பகுதியில் உள்ள கல்வித் துறை கட்டடம் அருகே பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

மேலும், குண்டூஷ் மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த 15 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு பாதுகாப்பு படை வீரர்களும் எதிர்தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும் சில பகுதிகளிலும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதால் தலிபான் பயங்கரவாதிகளின் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அஞ்சப்படுகிறது.

## தனிமையில் வாழ்பவர்கள் முன்கூட்டியே மரணம்!

### புதிய ஆய்வில் தகவல்

லண்டன், ஜூன் 12

தனிமையில் வாழ்பவர்கள் மனஅழுத்தம், அச்ச உணர்வால் முன்கூட்டியே மரணம் அடைகின்றனர் என்று புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க்கைச் சேர்ந்த கோபின் கேகன் பல்கலைக்கழக ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பயிற்சி மாணவர் அன்னி விண்கார்ட் கிறிஸ்டன்கன் இத்தகைய ஆய்வை மேற்கொண்டார்.

13 ஆயிரத்து 463 இருதய நோயாளிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களிடம் உங்களுக்கு எப்படி இருதய நோய் ஏற்பட்டது. உடல் நலமும், மன நலமும் பாதிக்கப்பட்டமை ஏன். புகைபிடித்தல், மது அருந்துதல் மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் போன்றவற்றால் இருதயநோய் உண்டானதா? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதற்கு பதில் அளித்த அவர்கள் தனிமை கொடுமையால் தான் இத்தகைய நோய் ஏற்பட்டது என்றனர். தனிமையால் இருமடங்கு மனஅழுத்தம் மற்றும் அச்ச உணர்வு ஏற்பட்டு உடல் நலமும், மனநலமும் பாதிக்கப்படுகின்றன.

இதேநிலை தொடரும் பட்சத்தில் அவர்கள் எதிர்பார்த்ததை விட முன் கூட்டியே மரணம் அடைகின்றனர் என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

## வெடிகுண்டு தாக்குதலில் இருந்து தப்ப ஆப்கானிஸ்தான் மக்கள் புதிய வியூகம்

### 'ஒன்லைன்' மூலம் பொருள்கள் கொள்வனவு

ஆப்கானிஸ்தான் மக்கள் பயங்கரவாதிகள் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக அன்றாடம் தேவையான பொருட்களை ஒன்லைன் மூலம் வாங்குகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் தினந்தோறும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது. குண்டு வெடிப்பு, தற்கொலை தாக்குதல்கள் அன்றாட வாடிக்கையாக உள்ளது.

பெண்கள் வீதியில் நடந்து செல்ல முடியவில்லை. பாலியல் தொல்லை கொடுக்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களால்வெளியில் பொது மக்களின் நடமாட்டம் குறைந்துவிட்டது. இருந்தாலும் அன்றாடம் தேவைப்படும் பொருள்களை வாங்க வேண்டிய கட்டாய நிலை உள்ளது. அதற்காக தற்போது 'ஒன்லைன்' வர்த்தகத்தை மக்கள் நாடுகின்றனர்.

அதன்மூலம் வீட்டு உபயோக பொருள்கள், கணினிகள், அழகு சாதன பொருள்கள், தளபாடங்கள், கார்கள் மற்றும் நிலம் வாங்குதல், விற்றல் என அனைத்தும் ஒன்லைனிலேயே நடைபெறுகிறது.




அதற்காகதற்போது ஆசாத் பஜார் ஆப், அபோம் ஆப், ஜே.வி பஜார் டொட்கொம் மற்றும் ரீனாஸ் டொட் கொம் என்பன போன்ற புதிய ஒன்லைன் வர்த்தக நிறுவனங்கள் முளைத்துள்ளன.

ஒன்லைனில் பொருள்கள் வாங்குவது தங்களுக்கு ஒரு புதிய அனுபவம் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் குறைந்த செலவில் விரும்பிய பொருள்கள் பாதுகாப்பாக கிடைக்கின்றன என்றும் கூறுகின்றனர்.

அதே நேரத்தில், பொருள்களை வாடிக்கையாளர்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் ஒன்லைன் வர்த்தகர்களின் பாடு திண்டாட்டமாக உள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தற்கொலைத் தாக்குதல்கள் வெடிகுண்டுத் தாக்குதல்கள் சர்வ சாதாரணமாக நடப்பதால் மக்கள் கூட்டம் இல்லாத வீதிகள் ஊடாக சென்று பொருள்கள் வழங்கப்படுகின்றன. நிலைமை மோசமாக இருக்கும் பட்சத்தில் பொருள் விநியோகம் நிறுத்தப்பட்டு நிலைமை சீரானதும் அவை வழங்கப்படுகின்றன.

50 ஆண்டுகளாக உள்நாட்டு போரில் சிக்கி தவிக்கும் ஆப்கானிஸ்தானில் தற்போது 50 இற்கும் மேற்பட்ட ஒன்லைன் வர்த்தக நிறுவனங்கள் புதிதாக வந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை அனுமதிப் பத்திரம் இன்றி நடத்தப்படுகின்றன என வர்த்தகத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சீனாவின் பட்டுப்பாதை திட்டத்துக்கு ஷங்காய் மாநாட்டில் இந்தியா எதிர்ப்பு



கிங்தாவோ, ஜூன் 12

ஷங்காய் மாநாட்டில் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்துக்கு இந்தியா ஒப்புதல் அளிக்க மறுப்பு தெரிவித்தது.

தென் கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா, வளைகுடா நாடுகள், ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றை நிலம் மற்றும் கடல் பாதைகளால் ஒருங்கிணைத்து ‘பி.ஆர்.ஐ.’ என்னும் பட்டுப்பாதை திட்டத்தை சீனா நிறைவேற்ற உள்ளது.

அனைத்து நாடுகளுக்கும் பயன் அளிக்கும் திட்டம் இது என்று சீனா கூறினாலும், ஆசிய பிராந்தியத்தில் அந்த நாடு தன் ஆதிக்கத்தை செலுத்தும் நோக்கத்தில்தான் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதாக இந்தியா கருதி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சீனா சுமார் 80 நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக சீனாவில் கிங்தாவோ நகரில் நடந்த ஷங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டின் 2 ஆம் நாள் நிறைவில் ஒரு பிரகடனம் கொண்டுவரப்பட்டது.

இதற்கு ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள ரஷ்யா, பாகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய பிற நாடுகள் ஒப்புதல் வழங்கி ஆதரவு தெரிவித்த போதும் இந்தியா ஒப்புதல் அளிக்க மறுத்து விட்டது.

இது தொடர்பாக மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி–

எந்த ஒரு மெகா இணைப்பு திட்டமும், நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்க வேண்டும். இதையெல்லாம் உள்ளடக்கிய முயற்சிகளுக்கு இந்தியா தனது ஆதரவை அளிக்கும் எனக் குறிப்பிட்டார்.

(க)

## காஷ்மீர் எல்லையில் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் 6 பேர் சுட்டுக்கொலை!

காஷ்மீர், ஜூன் 12

பாகிஸ்தான் பகுதியில் இருந்து காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் ராணுவ வீரர்கள் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் குப்வாரா மாவட்டம் கெரான் செக்டார் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டு பகுதி அருகே பாகிஸ்தான் பகுதியில் இருந்து காஷ்மீர் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை தீவிரவாதிகள் ஊடுருவ முயன்றமையை இந்திய ராணுவ வீரர்கள் கண்டுபிடித்தனர்.

உடனடியாக அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இருதரப்புக்கும் இடையில் சில மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தச் சண்டையில் தீவிரவாதிகள் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்திய தரப்பில் எந்தப் பாதிப்பும் இல்லை.

இந்தச் சண்டை காஷ்மீரில் உள்ள இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் பகுதியில் ராணுவ பாதுகாப்பு உள்ள இடத்தில் நடந்ததாக ராணுவ அதிகாரி ராஜேஷ் காலியா தெரிவித்தார்.

எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் அடர்ந்த காட்டுப் பகுதியில் இந்திய ராணுவ வீரர்கள் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## தூத்துக்குடி கலவரம் தொடர்பாக நாம் தமிழர் கட்சியினரிடம் விசாரணை

தூத்துக்குடி, ஜூன் 12

தூத்துக்குடியில் நடந்த கலவரம் தொடர்பாக நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் உட்பட 9 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடியில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தில் பயங்கர கலவரம் வெடித்தது. அப்போது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு மற்றும் தடியடி நடத்தினர். இதில் 13 பேர் பலியானார்கள். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதையடுத்து 15 நாள்களுக்கும் மேலாக தூத்துக்குடியில் பதற்றம் நிலவியது. பாதுகாப்புக்காக ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட் டிருந்தனர். உயிரிழந்த 13 பேரின் உடல்களும் பிரேத பரிசோதனை முடிந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமையை தொடர்ந்து, தூத்துக்குடியில் தற்போது அமைதி திரும்பியுள்ளது.

இந்த நிலையில், கலவரம் தொடர்பாக ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டக் குழுவைச் சேர்ந்தவர்களை கைது செய்யும் பணிகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் அ.வியனரசு கடந்த 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அக்கட் சியின் மண்டலத் தலைவர் இசக்கிதுரை, நிர்வாகி பாக்கியராஜ், அ.குமரெட்டியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த மகேஷ், பண்டாரம்பட்டியைச் சேர்ந்த பாண்டி உள்ளிட்ட 9 பேரை தனிப்படை பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்தனர். ரகசிய இடங்களில் வைத்து அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சுற்றுலா சென்ற 7 மாணவர்கள் விபத்தில் பலி!



இந்திய உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ள அதிவேக நெடுஞ்சாலையில் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் சுற்றுலா சென்ற 7 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆக்ராவுக்கும் லக்னோவுக்கும் இடையேவுள்ள அதிவேக நெடுஞ்சாலையில், சாந்த் கபீர் நகர் பகுதியில் இருந்து கல்லூரி மாணவர்கள் இரு பஸ்களில் ஹரித்வார் நோக்கி சுற்றுலா சென்று கொண்டிருந்த வேளையில், ஆக்ரா – லக்னோ இடையேயான அதிவேக நெடுஞ்சாலையில் அவர்கள் பயணித்த பஸ்ஸிற்கு எரிபொருள் நிரப்ப இறங்கிய பொழுது எதிரே வந்த பஸ் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த கோர விபத்தில் 6 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 3 மாணவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் ேங்ர்க்கப்பட்ட பின்னர் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மாணவர்கள் மீது மோதிவிட்டு தப்பிச் சென்ற பஸ்ஸையும், ஓட்டுநரையும் தேடி வருகின்றனர்.

## பண மதிப்பு நீக்கத்தால் பொருளாதாரம் நலிந்தது




பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் பொருளாதாரம் நலிந்துள்ளது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதி அமைச்சருமான ப.சிதம்பரம் இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு –

பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை வேண்டுமென்றே உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு மக்கள் இடையே கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. 2014 மே ஜூன் மாதத்திற்கு பிறகு எந்தவித காரணமும் இன்றி விலை உயர்த்தப்பட்டுள்ளது.

பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் பொருளாதாரம் நலிந்துள்ளது. மக்கள் அன்றாட தேவைக்கு எவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டும் என்பதை அரசு தீர்மானிக்க கூடாது. இது வாடிக்கையாளர்களை கசக்கி பிழியும் நடவடிக்கையே அன்றி வேறு ஒன்றும் இல்லை.

இணை செயலாளர் பதவி நியமனம் உள்ளிட்ட பல கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்தில் மத்திய அரசு உள்ளது.

விலையேற்றம் செயற்கை தனமானது என்ற எண்ணம் எழுந்துள்ளது. பெற்றோல், டீசல் விலை உயர்வால் விலைவாசி உயர்ந்துள்ளது. பெற்றோல், டீசல் விலை உயர்வுக்கு மத்திய அரசின் வரிகளே காரணம். ஏர் இந்தியா நிறுவன பங்குகள் விற்பனையில் கூட தெளிவான முடிவு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக அரசை கலைக்கும் என்னம் இல்லை என்கிறார் இல. கனேசன்

தமிழக அரசை கலைக்கும் எண்ணம் எதுவும் எங்களுக்கு இல்லை என்று பாரதீய ஜனதாவின் மாநிலங்களவை உறுப்பினர் இல கணேசன் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் –

‘காவிரி பிரச்சினை தொடர்பாக அப்போதைய கர்நாடக முதல்வர் சித்தராமையாவை பிரதமர் மோடி ஏன் கலந்து பேசவில்லை என சிலர் குற்றம் சுமத்துகின்றனர். அப்போது சட்டசபை தேர்தல் நடந்ததால் அதற்கான சூழ்நிலை அமையவில்லை.

அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக நிபுணர்கள் குழு பரிந்துரை தற்போது வெளிவந்துள்ளது. எனவே நாடாளுமன்ற தேர்தலுடன் சட்டசபைக்கும் தேர்தல் வரலாம்.தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது குறித்து இப்போது ஆலோசிக்கவில்லை.

தமிழகத்தில் எங்கள் நிலைப்பாடு என்னவென்றால் சூரியன் உதிக்கும் இடத்தில் சந்திரன் இருக்காது. அ.தி.மு.க. வுடனும் கூட்டணி இல்லை. தற்போது மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன்தான் நாங்கள் உள்ளோம். தேர்தல் வரும் போது அந்த நேரத்தில் கலந்து பேசி கூட்டணி பற்றி பின்னர் அறிவிப்போம். தமிழக அரசை கலைக்கும் எண்ணம் மத்திய பா.ஜனதா அரசுக்கு கிடையாது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில்தான் அப் படி நடந்துள்ளது. அதே நேரத்தில் ஆட்சி தானாக கலைந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 1/2நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன. கடையடைப்புக்குப் போதிய ஒத்துழைப்பு கிடைக்க வில்லை.

யாழ். மாவட்டக் கடற்தொழி லாளர் சமாசங்களின் சம்மே ளனமே இந்த அரைநாள் கடை யடைப்புக்கு கடந்த சனிக்கிழமை அழைப்பு விடுத்தது. கட்சிகள், பொது அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்காமல் பகிரங்க அழைப்பாகவே இதனை விடுப் பதாகக் கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் சுட் டிக்காட்டியிருந்தது.

இந்த நிலையிலேயே அரைநாள் கடையடைப்புக்கான அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்று வர்த்தகர் சங் கங்கள், தனியார் பஸ் உரிமை யாளர் சங்கங்கள் உட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணக் கடற்றொ ழிலாளர் சாமாசங்களின் சம் மேளங்களைச் சேர்ந்தோர், கடந்த சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பா ணத்தில் கூடி ஆராய்ந்தனர்.

வடமராட்சி கிழக்குக் கடற்பகு தியில் கடலட்டைத் தொழிலை முன்னெடுக்கும் தென்னி லங்கை மீனவர்களை வெளி யேற்றக் கோரியும் கடலட்டைத் தொழிலை வடக்கில் தடை செய் யக் கோரியும் யாழ்ப்பாணம் பிர தான வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்டக் கடற் தொழி லாளர் சமாசங்களின் சம்மேள னத்தின் அலுவலகத்துக்கு முன் பாகவிருந்து பேரணி யாகச் சென்றுயாழ். மாவட்ட செயலகத் தில் மனு கையளிப்பது என்று அவர்கள் தீர்மானம் எடுத்தனர்.

இந்தத் தீர்மானத்தை அறி விக்கும் செய்தியாளர் சந்திப்பை நடத்திய யாழ். மாவட்டக் கடற் தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர்,

வடமராட்சி கிழக்கில் தென் னிலங்கை மீனவர்களால் மேற் கொள்ளப்பட்டுவரும் கடலட் டைத் தொழிலைத் தடை செய்ய வலியுறுத்தி வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் சமாசங்கள் ஒன்றிணைந்து திங்கட்கிழமை (நேற்று) மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை யாழ். நகரில் முன்னெடுக்கவுள்ளன. இந்தப் பேரணிக்கு ஆதரவாக அன் றையதினம் நண்பகல் 12 மணி வரை கடையடைப்பை முன்னெ டுத்து ஆதரவு வழங்குமாறு அனைத்துத் தரப்பினரிடமும் கோருகின்றோம்.

வர்த்தகர்கள், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர், ஓட்டோச் சாரதிகள் உட்பட அனை வரையும் இந்தப் போராட்டத் துக்கு ஆதரவளிக்குமாறு பகி ரங்க அழைப்பை விடுக்கின் றோம். பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை வழமை போன்று இயங்கு மாறும் சம்மே ளனம் கேட்டுக் கொள்கிறது என்று தெரிவித்திருந்தார்.

ஆயினும் நேற்று யாழ். நகர் உட்படச் சகல இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் வழமை போன்று திறந்திருந்தன. தனி யார் பஸ் சேவைகளும் தடை யின்றி இடம்பெற்றன. இதனால் கடையடைப்புப் போராட்டத் துக்குப் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. (ஐ-7)

## தயாசிறியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மத்திய வங்கிப் பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக் கப்பட்டுள்ள 'பி' அறிக்கை படி, நாடாளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர 2015ஆம் ஆண்டில் பேர்பேச்சுவல் ட்ரெஸ ரீஸ் நிறுவனத்தின் துணை நிறுவனம் ஒன்றி டமிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை பெற்றுக்கொண்டுள் ளார் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலேயே நேற்று விசாரணை நடத்தப்பட்டது. (ஐ)

## பேரணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னிலங்கை மீனவர்களை வெளியேற்றக் கோரி முன் னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்பதற்காக வருகை தந்த தமிழரசுக் கட்சின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராசாவை மீனவர்கள் சிலர் வெளியேற் றினர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி யிலுள்ள கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8.45 மணிக் குப்பேரணி ஆரம் பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பேரணிக்கான ஏற் பாடுகள் நடைபெற்றுக் கொண் டிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா அங்கு வருகை தந்திருந் தார்.

அவர் சம்மேளத்தின் அலு வலகத்துக்குச் சென்று அதன் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிக் கொண்டி ருந்தார்.

இந்த விடயம் போராட்டத் துக்கு வந்திருந்த மீனவர்கள் சிலருக்குத்தெரியவர அவர்கள், ''அரசியல்வாதிகள் இங்கு தேவையில்லை, அவர்களை வெளியேற்று'' எனக் கோஷங் கள் எழுப்பினர்.

இதனால் மாவை சேனாதி ராசா உடனடியாக அவ்விடத் தில் இருந்து வெளியேறினார். அவர் பேரணியிலும் பங்கேற்க வில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் அரசியல்வாதிகளுக்கு எதி ராகக் கடுமையான விமர்சனங் களை முன்வைத்தனர்.

அரசியல்வாதிகள் எமது போராட்டங்களுக்கு வருகிறீர் கள். பலவற்றைக் கதைக் கிறீர்கள். ஆனால் அவற்றைச் செயல்படுத்தாமல் விட்டு விடுகி றீர்கள்.

"நாடாளுமன்றத்தில் எமது பிரச்சினை தொடர்பில் குரல் கொடுப்பதில்லை. மக்களின் அன்றாடப் பிரச்சினை, அத்தி யாவசியப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவை தொடர்பிலும் குரல் கொடுப்ப தில்லை. மீன்பிடித் தொழில் செய்யும் எமக்குப் பாரிய பிரச் சினை மண்ணெண்ணெய் விலை உயர்வு. அதற்கும் எமது அரசியல்வாதிகள் குரல் கொடுக்கவில்லை. இதை விட்டு விட்டு நினைவேந்தலுக்கு வழங்கிய ஏழு ஆயிரம் ரூபா யைத் திரும்பத் தரச்சொல்லி ஒருவர் கேட்கிறார். என்ன இது?

மீனவர் சமூகம் என்பது பரந்துபட்டதாகும். நாம் வாக் காளிக்காவிட்டால் நீங்கள் யாரும் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்க முடியாது. எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்காக எந்தவித ஏற்பாடுகளை யும் செய்யாமல் போராட்டம் என்றவுடன் வேட்டி கட்டிக் கொண்டு வந்திடுவார்கள்'' எனப் போராட்டக்காரர்கள் சீறிப்பாய்ந் தனர்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாணசபை உறுப் பினர் எஸ்.சுகிர்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகி யோரும் அங்கு வருகை தந் தனர்.

எனினும் அரசியல்வாதிகள் தேவையில்லை எனப் போராட் டக் காரர்கள் கூச்சலிட்ட விட யத்தை அறிந்துகொண்ட அவர்கள், சமாசத்துக்குள் செல்வதையோ, போராட்டத் துக்கு முன்பாக செயற்படுவ தையோ தவிர்த்திருந்தனர். போராட்டக்காரர்களுடன் பேர ணியாகச் சென்று அவர்களுக் குத் தமது ஆதரவை வழங்கி னர். (ஐ -7)

## கடலட்டைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு மீனவர்கள் யாழ்.மாவட் டத்தில் பேரணி ஒன்றை முன் னெடுத்து அரச அலுவலகங் களையும் முற்றுகையிட்டனர்.

வடமராட்சி கிழக்கு மரு தங்கேணிப் பகுதியில், தென் னிலங்கை மீனவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகக் கடலட்டைத் தொழிலில் ஈடு டுவதற்கு எதிராக உள்ளூர் மீனவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களின் தொடர்ச்சி யாக நேற்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

யாழ். மாவட்டக் கடற்தொழி லாளர் கூட்டுறவுச் சமா சங் களின் சம்மேளனம், வட மாகாணக் கடற்தொழிலாளர் இணையம் ஆகியன இணைந்து இந்த ஆர்ப்பாட் டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

தமது பகுதிகளில் அத்து மீறிக் கடலட்டைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீது கடற் தொழில் நீரியல் வளத் திணைக் கள அதிகாரிகள் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப் படுத்தவேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாக இருந்தது.

யாழ்ப்பாணம் பிரதான வீதி யில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் கடற்தொழிலாளர் சங்கத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, யாழ். மாவட்ட செயலகம் வரை பேர ணியாகச் சென்று மாவட்ட செயலகத்தை சிறிது நேரம் முற்றுகையிட்டதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை யாழ். மாவட்ட அரச அதிபரிடம் போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

அதைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளநர் செயலகத் துக்கும் சென்ற போராட்டக்காரர் கள் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கான தமது மனுவை ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல் வநாயகத்திடம் கையளித்தனர்.

யாழ். பண்ணையிலுள்ள கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்குச் சென்ற போராட்டக்காரர்கள் அலுவ லகத்தை முற்றுகையிட்டுடன் மாவட்டக் கடற்தொழில் பணிப் பாளர் சுதாகரிடம் மனு ஒன்றை யும் கையளித்தனர். (ஐ-7)

## ஆளுநருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழமை பேச்சு நடைபெற வுள்ளது.

வடமராட்சி கிழக்கில் அத்து மீறித் தொழிலில் ஈடுபடும் தென் னிலங்கை மீனவர்களை வெளி யேற்றக் கோரி மீனவர் அமைப்புக்கள் இணைந்து நேற்று யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்றை முன்னெ டுத்தன.

இதன்போது ஆளுநருக்கும் மனு சமர்ப்பிக்கப்பட்டது. ஆளு நருக்கான மனுவைப் பெற்றுக் கொண்ட ஆளுநரின் மேலதிக செயலாளர், மீனவர் சங்கங்க ளின் பிரதிநிதிகள் நாளை காலை ஆளுநரைச் சந்திப் பதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாகவும், அதில் பங்கேற்கு மாறும் அங்கு வந்திருந்த மீன வர் அமைப்புக்களிடம் கூறி னார். (ஐ-7)

## பகிடிவதைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது அரசியல் நோக்கங் களுக்குப் பயன்படுத்திக் கொள் வதற்காக மாணவர் களை இவ்வாறான விட யங்களில் ஈடுபடுத்துகிறார் கள். இது மாணவப் பயங்கரவாத மாகும். என்னை யாரும் தூற் றட்டும். நான் உண்மையையே சொல்கிறேன்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பண்டாரவளை பாடசாலை ஒன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற் றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் –

தற்போது பல்கலைக்கழகங் களில் புதிய மாணவர்களுக்கு மனிதாபிமானமற்ற முறையில் பகிடிவதைகள் இடம்பெறுவது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். பல்கலைக்கழகங்களில் பகி டிவதை இடம்பெறுவது இன்று நேற்றல்ல. அதற்கு நீண்ட வரலாறு உள்ளது.

என்றாலும், இன்று இடம் பெறுகின்ற வியடங்கள் மனி தாபிமானமற்றவையாகும். இவற்றை மாணவர்களுக்கு யார் கற்றுக்கொடுக்கிறார்கள்? கடந்த சில மாதங்களாகப் பல் கலைக்கழகங்களில் மிக மோசமான முறையில் மனி தாபிமானமற்ற முறையில் பகிடி வதைகள் இடம்பெற் றுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் அப்பாவி மாணவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடனேயே அங்கு செல்கிறார்கள். தங் களைப் பற்றியும் பெற்றோர், தாய் நாடு, சமூகம் தொடர்பான எதிர்பார்ப்புகள் அவர்களிடம் உள்ளது. இந்தப் பகிடிவதை களை மேற்கொள்கின்றவர் கள் இரண்டு மூன்று வருடங்க ளுக்கு முன்னர் புதிய மாண வர்களாகப் பல்கலைக்கழகத் திற்குச் சென்ற இதேபோன்ற மாணவர்கள்தான்.

இவற்றுக்குப் பின்னால் இருப்பது யார். அவர்கள் தான் அதிகார மோகம் கொண்ட அரசியல்வாதிகளே. அரசியல் அதிகாரத்துக்காக மாணவர் சங்கங்களைத் தமது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத் திக் கொள்வதற்காக மாணவர் களை இவ்வாறான விடயங் களில் ஈடுபடுத்துகிறார்கள்.

இது மாணவப் பயங்கர வாதமாகும். என்னை யாரும் தூற்றட்டும். நான் உண்மை யையே சொல்கிறேன்.

கடந்த சுமார் முப்பது வருடங் களாகப் பல்கலைக்கழகக் கல் வியைப் பெற்றுக்கொள்வதற் காகச் சென்ற மாணவர்களில் எத்தனை பேர் தங்களது உயிர்களை மாய்த்துக்கொண் டுள்ளனர். அங்கவீனமுற்றுள் ளனர் உளநோயாளிகளாக மாறியிருக்கின்றனர்.

இந்த வரவேற்பு பண்பாடான முறையில் இடம்பெறுமானால் அது தவறில்லை. ஆனால் இவ்வாறான மனிதாபிமான மற்ற நடவடிக்கைகளை ஏற் றுக்கொள்ள முடியாது. இவர்கள் தான் நாளை நாட்டைப் பொறுப்பேற்க இருக்கின்றவர் கள்.

பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்ற ஒருவர் மகிழ்ச்சி யாகத் தனது கல்வி நடவடிக் கைகளை மேற்கொள்ளும் சூழல் ஏற்படும்போதுதான் நாம் மகிழ்ச்சியடைய முடியும். இவ் வாறு வருகின்றவர்கள் தான் மருத்துவர்களாகவும், பொறியி யலாளர்களாகவும் வேறு துறைகளுக்கும் செல்கிறார்கள்.

என்றாலும் இத்தகைய நடத்தை உள்ளவர்கள் எந்தத் துறைக்குச் சென்றாலும் இந்நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றே எனக்குச் சொல்ல முடியும்.

எனவே சிறந்ததோர் சமூகத் தைக் கட்டியெழுப்புவதற்கு தொழில்நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்துங்கள். இவ்வா றான பண்பாடற்ற விடயங் களை ஒழித்துக்கட்டுங்கள். சமூகப் பொறுப்பு தொடர்பில் தெளி வுடன் செயற்படுங்கள்.

பரீட்சைகளில் வெற்றி பெறு வதுபோன்று வாழ்க்கையின் சவாலையும் நாம் வெற்றி கொள்ள வேண்டும். அதற்கு முகம் கொடுக்கவேண்டும். அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச் சித்திட்டங்களின் அடிப்படை யில் அமைச்சர்களினதும் பல் கலைக்கழக அதிகாரிகளினதும் ஒத்துழைப்புடன் இந்த மனி தாபிமானமற்ற நிலைமைகளை எமக்கு எதிர்காலத்தில் மாற்ற முடியுமென நாம் நம்புகிறோம். – என்றார். (ஐ)

## பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் ஒருவர் பணம் பெற்றுக்கொள்வ தாயின் அவருக்கு எதிராகக் கடு மையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஒருவர் இன்னொருவரிடம் பணம் பெற்றுக்கொள்வது ஒரு பெரிய பிரச்சினையாகக் காணப்படாவிட்டாலும் பணம் பெற்றுக்கொள்வதற்கான காரணம் ஆராயப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அரசியல் இலாபத்துக்காகப் பணம் பெறப்பட்டிருக்குமாயின் அது பாரிய குற்றம் எனச் சுட் டிக்காட்டிய முதலமைச்சர் அவ் வாறான அரசியல்வாதிகள் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும். இல்லாவிட்டால் ஒதுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் எந்தவித நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டா லும் அவை பொதுமக்களுக்குத் தெரியும் விதத்தில் வெளிப் படையாக காணப்பட வேண் டும் முதலமைச்சர் வலியுறுத்தி னார். (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதாகத் தெரிவித்த திருகோணம லை மாவட்டக் காணாமற் போனோர் சங்கத்தின் தலைவி நஆஷா, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத திலும் ஈடுபடவுள்ளதாகக் கூறி னார்.

திருகோணமலையில் இடம் பெறவுள்ள இந்த அமர்வைத் தாம் புறக்கணிக்கவுள்ளதுடன், கிழக்கு மாகாண அளுநர் செய லகத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடத் தீர் மானித்துள்ளதாக அவர் தெரி வித்தார்.

இந்த எதிர்ப்பு நடவடிக் கைகளின்போது, கடந்த காலத் தைப்போன்று பொது அமைப் புகள் ஆதரவு தரவேண்டு மென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)



# பிரான்ஸ் – அமெரிக்கா போட்டி சம நிலையில்

இடம்பெற்றுவரும் சிநேகபூர்வ கால்பந்தாட்ட போட்டிகளின் வரிசையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டுஅணிகளும்தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றதுடன், ஐக்கிய அமெரிக்கா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் கிறீன் பெற்றிருந்தார்.

# இங்கிலாந்து அதிர்ச்சித் தோல்வி



ஸ்கொட்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒரேயொரு ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி, அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளது.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண தொடருக்கு, தயார்படுத்தல்களை மேற்கொண்டு வரும் இங்கிலாந்து அணி, கத்துக்குட்டி அணியான ஸ்கொட்லாந்திடம் இவ்வாறு தோல்வியை சந்தித்திருப்பது இங்கிலாந்து இரசிகர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எடின்பர்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, கல்யும் மெக்லியோட்டின் அதிரடியின் துடுப்பாட்டத்தின் துணையுடன் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 371 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் கல்யும் மெக்லியோட் ஆட்டமிழக்காது 140 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் அடில் ராஷித், லியாம் பிளன்கெட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து 372 என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 48.5 ஓவர்கள் நிறைவில் 365 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து அணி சார்பில் ஜோனி பேர்ஸ்டோவ் 105 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மார்க் வோட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கல்யும் மெக்லியோட் தெரிவு செய்யப்பட்டார்.

# உதைபந்தாட்ட அணிகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி வரவேற்பு!

உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க ரஷ்யாவுக்கு சென்றுள்ள அனைத்து வீரர்களையும், இரசிகர்களையும் ஜனாதிபதி விளாடிமீர் புடின் உத்தியோகபூர்வமாக வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள விசேட காணொலியில் ரஷ்ய ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்



குறிப்பிடுகையில்,

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளை ஏற்று நடத்துவதில் ரஷ்யா பெருமிதம் கொள்வதுடன், இதனை மாபெரும்கௌரவமாக கருதுகின்றோம். உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க வருகை தந்திருக்கும் அனைத்து வீரர்களையும் ரஷ்யா மகிழ்சியுடனும், கௌரவமாகவும் வரவேற்கின்றது.

அதேபோல் போட்டிகளைக் காண உலகம் முழுவதிலும் இருந்து ரஷ்யாவுக்கு வருகை தந்துள்ள இரசிகர்களையும் நான் வரவேற்கின்றேன். இதனை ஒரு மைல்கல்லாக நான் கருதுகின்றேன்.

மேலும் உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக வருகை தந்துள்ள கால்பந்தாட்டச் சம்மேளன அதிகாரிகளையும் நான் வரவேற்கின்றேன். இது எமது நாட்டுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். எனவே உங்கள் அனைவரையும் இதயம் நிறைந்த வாழ்த்துக்களோடு வரவேற்கின்றேன்.– என்றார்.

# ஐரோப்பாவிலேயே இருப்பாராம் ரொனால்டோ



ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்கள வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, றியல் மட்ரிட்டை விட்டு வெளியேறினாலும் ஐரோப்பாவுக்குள் உள்ள குறிப்பிட்ட கழகங்களுக்கே விளையாடுவார் என்று கூறப்படுகிறது.

அந்தவகையில், றியல் மட்ரிட்டிலிருந்து நடப்பு பருவகாலத்தில் வெளியேறுவதில் 33 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ இன்னும் உறுதியாக உள்ளார் என்றும் ஆயினும் ஐக்கிய அமெரிக்கா, மத்திய கிழக்கு, சீனா, ஜப்பான் ஆகிய இடங்களுக்குச் செல்லமாட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பிரெஞ்சு லீக் 1, இங்கிலாந்து பிறீமியர் லீக், இத்தாலிய சீரி ஏ கழகங்களிலொன்றுக்கே கிறிஸ்டியானோ ரொனால்டோ செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இலங்கை படுதோல்வி

புதிய பயிற்சியாளர் சந்திக்க ஹத்துருசிங்க தலைமையில் மீண்டெழும் என நம்பிக்கை வெளியிடப்பட்ட இலங்கை அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வியைத் தழுவி இலங்கை ரசிகர்களைச்சோகத்தில் மூழ்கடித்துள்ளது.

ட்ரினிடாட் அன்ட் டுபாக்கோவில் நடைபெற்றுவந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் 226 ஓட்டங்களால் இலங்கை அணியைத் தோற்கடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை போர்ட் ஒப் ஸ்பெயின் மைதானத்தில் ஆரம்பமாகிய இந்த டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி நாணயச் சுழற்சியில் வென்று முதல்இன்னிங்சினை414ஓட்டங்களுடன் முடித்திருந்தது. பதிலுக்கு தமது முதல் இன்னிங்சில் ஆடிய இலங்கை வீரர்கள் 185 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

இதன் பின்னர், தமது இரண்டாவது இன்னிங்சில் மீண்டும் துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் 227 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், தமது ஆட்டத்தை இடைநிறுத்தி இலங்கை அணிக்குப் போட்டியின் வெற்றி இலக்காக 453 ஓட்டங்களை நிர்ணயம் செய்திருந்தனர்.

இந்த கடின வெற்றி இலக்கை அடைவதற்காக இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை தொடங்கிய இலங்கை அணி போட்டியின் நான்காம் நாள் (சனிக்கிழமை) முடிவில் 53.4 ஓவர்கள் நிறைவில் 176 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து நல்ல நிலை ஒன்றில் காணப்பட்டிருந்தது. களத்தில் குசல் மெண்டிஸ் 94 ஓட்டங்களுடனும், லஹிரு கமகே ஓட்டங்கள் எதுவுமின்றியும் நின்றிருந்தனர்.

முதல் இன்னிங்ஸில் தடுமாறிய இலங்கை அணி பெரியதொரு சவாலான இலக்கை எட்ட நல்லதொரு ஆரம்பத்தைக் காட்டியிருந்த காரணத்தினாலும், டெஸ்ட் போட்டிகள் வரலாற்றில் இரண்டாம் இன்னிங்சில் எட்டப்பட்ட அதிகூடிய இலக்கு 418 ஓட்டங்கள் என்பதாலும் இந்தப்போட்டியில்திருப்பு முனையான முடிவு ஒன்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இதன்படி, போட்டியின் ஐந்தாவது மற்றும் இறுதி நாளான நேற்றுமுன் தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற இன்னும் 277 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 7 விக்கெட்டுக்களை மீதமாக வைத்திருந்த இலங்கை அணி தமது இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தது.

முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரையும் பறிகொடுத்து 222 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும் இலங்கை அணி இழந்தது.

இதன்படி, இலங்கை அணி 83.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுப் போட்டியில் படுதோல்வி அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை முதல் இன்னிங்சில் சதம் கடந்த விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் சேன் டோவ்ரிச் பெற்றுக் கொண்டார்.

# தென்னிலங்கை மீனவர்களுக்கு 5 உள்ளூர்ச் சங்கங்களே ஆதரவு

## கடற்றொழில் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடமராட்சி கிழக்கில் கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களுக்கு அப்பகுதியைச் சேர்ந்த 5 உள்ளூர் மீனவர் சங்கங்களும் தனிப்பட்ட சிலரும் ஆதவு வழங்கி வருகின்றனர் என யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.

நேற்று யாழ். நகரில் வடமராட்சி கிழக்கு மீனவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் மகஜரைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடமராட்சி கிழக்கில் அத்து மீறிச் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடுவதாகக் கூறப்படும் தொழிலாளர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொழில் செய்வதற்கு கடற்தொழில் நீரியில் வளத் திணைக்களத்திடம் அனுமதி பெற்றுள்ளனர்.

அந்த அனுமதியுடன் கடற்தொழில் சங்கங்களிடமும் அனுமதிகளைப் பெறவேண்டும். அத்தோடு அதற்கான இடங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தோடு அங்கு வாடிகள் அமைப்பதாயின் பிரதேச செயலகத்தின் அனுமதியையும் பெறவேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. இந் நிலையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து சங்கங்கள் தென்னிலங்கை மீனவர்கள் தொழில் செய்வதற்கான அனுமதிகளை வழங்கியுள்ளன. அதேபோன்று தனிப்பட்ட வகையில் சிலர் தமது காணிகளையும் வழங்கியுள்ளனர்.

வாடிகளை அமைப்பதற்கு பிரதேச செயலகம் அனுமதியை இன்னமும் வழங்கவில்லை. அதேபோன்று கடலட்டை பிடிப்பதற்கு யாழ்ப்பாணத்திலும் அனுமதியில்லை. இவை எல்லாம் குறித்து நாம் நீரியல் வளத் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தி எம்மால் மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

அங்கு கடலட்டை பிடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் போது எங்களுக்குத் தெரிவிக்குமாறும் அந்தப் பகுதிக் கடற்தொழிலாளர்களிடமும் தெரிவித்திருக்கின்றோம்.

அப்படித் தெரிவித்தால் கடற்படையுடன் இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் – என்றார். (ஐ–7)

# காரைநகர் வரவேற்பு வளைவு நேற்றுக் காலை திறந்துவைப்பு










யாழ்ப்பாணம், ஜூன் 12

காரைநகர் பிரதான வீதியில் வலந்தலைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள காரைநகர் வரவேற்பு அலங்கார வளைவு நேற்றுச் சமய வழிபாடுகளுடன் திறந்துவைக்கப்பட்டது.

காரைநகர் வரவேற்பு வளைவு திறப்புவிழா நிகழ்வு காரைநகர் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சுந்தேரஸ்வரன் கிருஷ்ணவரதன் தலைமையில் இடம்பெற்றது.

திறப்பு விழா நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் கலந்து கொண்டனர்.

வீணாகான குருபீட குரு முதல்வர் சந்நிதாச்சாரியர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களின் சமய வழிபாடுகளுடன் நிகழ்வு இடம்பெற்றது.

சமய வழிபாடுகள் மற்றும் கிரியைகளின் பின்னர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோருடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்களும் இணைந்து நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

தொடர்ந்து வரவேற்பு வளைவின் மேல் அமைக்கப்பட்டுள்ள நாடராஜர் சிலையை வீணாகான குருபீட குரு முதல்வர் சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதன்பின்னர் நடாவெட்டப்பட்டு, உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணம் – காரைநகர் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட நுழைவாயில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நுழைவாயில் திறப்புவிழா நிகழ்வில் சமய குருமார்கள், காரைநகர் பிரதேச மக்கள், மாநகர, பிரதேசபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ–7)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.